ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ புஷ்பவல்லீ ஸமேத ஸ்ரீ தேஹளீச ஸ்வாமிநே நம:

திருக்கோவலூர் ஸ்தல புராணம்



ஸ்ரீநிவாஸ ராமாநுஜாசாரியார்
16, ஸ்ரீ திருவிக்ரமஸ்வாமி ஸந்நிதி தெரு,
திருக்கோவலூர்—605757
தென்னாற்காடு மாவட்டம்

ஸ்ரீ:

ஸ்ரீ புஷ்பவல்லீ ஸமேத ஸ்ரீ தேஹளீச
ஸ்வாமினே நம:



ஸ்ரீமதே ராமானுஜாய நம:

திருக்கோவலூர் ஸ்தல புராணம்

வெளியீடு

ஸ்ரீ ஸ்ரீநிவாஸராமானுஜாச்சாரியார்

ஸ்ரீ திருவிக்ரமஸ்வாமி ஸன்னதி தெரு
திருக்கோவலூர் — 605757
தென்னாற்காடு மாவட்டம்
(தமிழ்நாடு)

இரண்டாம் பதிப்பு

ஆகஸ்ட் மாதம் 1986

விலை ரூ. 5

கிடைக்குமிடம்

ஸ்ரீ நிவாஸ ராமாநுஜாச்சாரியார்
ஸ்ரீ த்ரிவிக்ரம ஸ்வாமி ஸன்னதி
ஆதீனபரம்பரை தர்மகர்த்தா
ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் மாடாதிபதி
திருக்கோவலூர்—605 757
(தென்னாற்காடு மாவட்டம்)

குரு அச்சகம், 19, இருசப்ப கிராமணி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

31/3

ஸ்ரீ ஹரி :

முதல் பதிப்பின் மதிப்புரை

ச்ரிய : பதியான எம்பெருமான் 'தானுகந்தவூர்' என்னும்படி உகந்து எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசங்கள் பல பல. அவற்றில் 'நடு நாடு' என்று பிரஸித்தி பெற்றதும், 'பஞ்ச கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரம்' என்று பிரஸித்தி பெற்றதுமான திருக்கோவலூர் என்னும் இத் திவ்ய தேசம் மஹாத்மாக்களான மஹர்ஷிகளாலும், ஆசார்ய சிரேஷ்டர்களாலும் மங்களாசாஸனம் செய்யப் பெற்ற பெருமை பெற்றதாகும். இத்திவ்ய தேச வைபவம் எல்லோரும் அறியும் வண்ணம் எளிய தமிழில் இதுவரை வெளியிடப்படாமல் இருந்து வந்த குறை தீர இப்பொழுது மிகவும் அழகிய தமிழில் வெளியிடப் பெறுகிறது. அடியேனுக்குப் பரம ஆப்தரான ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகளால் இத் திவ்ய தேச வைபவம் வடமொழியில் இருந்து பாத்ம புராணத்தில் உள்ளவைகளை மொழி பெயர்த்து எல்லோரும் அறியும் வண்ணம் வெளியிடப்பட்டது மிகப் பொருத்தமுடையதாகும். அதுவும் கிருஷ்ண க்ஷேத்ர மன்றோ? மேலும் சென்ற நள ஆண்டில் பங்குனி பிரம்மோத்ஸவ ஸ்ரீ வைஷ்ணவ மஹா நாட்டில் அடியேன் இந்த திவ்ய தேச வைபவத்தை வெளியிட வேண்டுமென்று ஓர் விண்ணப்பம் செய்து கொண்டேன். உடனே இது விஷயமாக சென்னையில் வாழும் ஸ்ரீமான் T. K. ராமானுஜ தாஸா அவர்களும், அவரது உத்தம பார்யை ஸ்ரீமதி ஸ்ரீதேவி அம்மாள் அவர்களும் மிகவும் உத்ஸாஹத்துடன் ஷை மஹா நாட்டிலேயே தங்கள் வெளியீடான கிரந்தத்தை விற்று உபகரித்தார்கள். திருக்கோவலூர் ஸ்ரீவைஷ்ணவ மஹா நாட்டையும், ததீயாராதன கைங்கரியத்தையும் மிகவும் சிறப்புடன் நடத்தி வரும் வாணுபுரம் ஸ்ரீமான் P. R. திரிவிக்ரம ரெட்டியார் அவர்களும (ஷை ஸபைத் தலைவர்) மிகவும். உகந்து இத் திவ்ய தேச வைபவம் வெளியிடுவதற்குப் பேருதவி புரிந்தது பாராட்டத் தக்கதாகும். இந்த அரிய கைங்கர்யத்தில் மற்றும் பல பக்தர்களும் தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்கள். இக் கைங்கரியத்தில் உபகரித்த அனைவருக்கும் ஸ்ரீ பூங்கோவல் இடைகழி ஆயன் அருள் புரியப் பிரார்த்திக்கிறேன். பக்தர்கள் யாவரும் இந்த திவ்ய தேச வைபவத்தைப் படித்து ஸ்ரீ திரிவிக்ரமனுடைய கடாக்ஷத்தைப் பெற வேணும்

ஸ்ரீ திருவேங்கடராமானுஜாச்சாரியார்

ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி

திருக்கோவலூர்.

ஸ்ரீ ஹரி :

முகவுரை

எம்பெருமான் திருவுள்ளம் உகந்து ஸம்ஸாரிகளான மக்களைக் கரையேற்றி காப்பாற்ற வேண்டி அர்ச்சாவதாரம் கொண்டு எழுந்தருளியிருக்கும் பல திவ்ய தேசங்கள் உண்டு. அவைகளுள் ஆழ்வார்கள் மங்களாசாஸனம் பெற்ற திவ்ய தேசம் நூற்று எட்டு [108] என்பர். அந்த திவ்ய தேசங்களுள் முதலாழ்வார் எனப்படும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் எனப்படும் இம் மூவரும் முதன் முதல் எம்பெருமானை நேரில் பார்த்துப் பாசுரம் அருளிச் செய்த திவ்ய தேசம் திருக்கோவலூர். திவ்ய ப்ரபந்தம் அவதரித்த ஊர் எனலாம். இந்த திவ்ய தேசத்தின் பெருமை பாத்ம புராணத்தில் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

உ. வே. ஸ்ரீ ஸ்ரீ திருவேங்கடராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள் தெலுங்கு லிபியில் வெகு நாட்களுக்கு முன்பு பிரசுரிக்கப்பட்ட ஒரு ஸ்ரீ கோசத்தைக் கொடுத்து, அதை மொழி பெயர்த்து வெளியிடும்படி அடியேனை ஆக்ஞாபித்தார். எனக்கும் அதில் ஆர்வம் உண்டாயிற்று. பகவான் இந்த சிறு கைங்கர்யத்தை நிறைவேற்றினான். இது பக்த ஜனங்களுக்கு உபயோகமாகும்படி இப்பொழுது பிரசுரித்து வெளியாகி வருகிறது.

இத்தகைய கைங்கர்யத்தில் அடியேனை மேன் மேலும் எம்பெருமான் ஊக்குவிக்கும்படி எம்பெருமானார் ஜீயர் மூலமாய் திரிவிக்ரமனை சரண் அடைகிறேன்.

இப்படிக்கு,

ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி



திருக்கோவலூர் — மூலவர்

ஸ்ரீ ஹரி :

திருக்கோவலூர் தல புராணம்

ருஷி என்னும் முனிவர் கேட்கிறார் :

வியாஸ சிஷ்யரும், மஹாஞானியும், ஹரியினிடம் பக்தியுமுடைய சௌனகரே! பல விதமான கர்மாக்களைச் செய்து அதன் பலன்களை அனுபவிக்கும் ஜீவகோடிகளின் பலவேறு கதிகளைச் சொன்னீர்கள் மேலும் இந்தப் பூமியில் உள்ள பல க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள், நகரங்கள், மலைகள் இவைகளையும் வர்ணித்தீர்கள். இப்பொழுது சோழ நாட்டிலுள்ள பல க்ஷேத்திரங்களின் மஹிமையைச் சொல்லுவீராக.

இதைக் கேட்ட சௌனகர் கூறுகிறார் :

ஒரு ஸமயம் கங்கைக் கரையில் ஜனக மஹாராஜன் ஒரு யாகம் செய்து கொண்டிருந்தான். அப்பொழுது ப்ரம்மலோகவாஸிகளான தக்ஷன், பிருகு, வஸிஷ்டர் முதலிய ப்ரும்மருஷிகள் அங்கு வந்தனர். சிறந்த தபஸ்விகளும் அக்னியைப்போல் ப்ரகாசிப்பவர்களுமான அந்த முனிவர்களைக் கண்ட ஜனகராஜன் மிகவும் மனமகிழ்ந்து அர்க்யம் பாத்யம் முதலியவைகளால் அவர்களைப் பூஜித்துக் கை குவித்தவண்ணம், ''முனிவர்களே! தங்கள் வருகையால் நான் தன்யனானேன். என் ஜன்மம் ஸபலமாயிற்று. எனது தவம் பலித்து விட்டது. அடியேன் தேவரீர்களுக்குச் செய்யக்கூடியது என்ன இருக்கிறது?'' என்று கேட்டு நின்றான். அப்பொழுது அவனுடைய வினயத்தைக் கண்ட முனிவர்கள், ''அரசே! உன் யாகத்தைப் பார்ப்பதற்

காகவே வந்தோம். வேறு விசேஷமில்லை'' என்றனர். பிறகு அரசனும் அந்த முனிவர்களும் ஸ்ரீ நாராயணனின் திவ்ய குணங்களை பரஸ்பரம் பேசிக்கொண்டு உள்ளம் பூரித்திருந்தனர். அப்பொழுது அங்கு உலகம் பூராவும் சுற்றி தீர்த்த யாத்ரை செய்து முடித்துக் கொண்டு வாம தேவர் என்கிற முனிவர் வரவே யாவரும் எழுந்திருந்து அவரை வரவேற்று பூஜை செய்தனர். பிறகு யாவரும் அவரைப் பார்த்து 'முனிவரே! நீர் இந்த பூமியில் உள்ள பல தீர்த்தங்களிலும் ஆடி பல க்ஷேத்திரங்களிலும் பகவானை தரிசித்து வருகிறீர். இதுவரை நீர் தரிசித்த தலங்களுள் எவையெவை சிறந்தவையென்று எமக்குச் சொல்லுவீராக'' என்றனர்.

அப்பொழுது வாமதேவர் சொல்லுகிறார் :

முனிவர்களே! க்ஷேத்திரங்கள் அளவு கடந்து இருக் கின்றன. அவை யாவையும் சொல்லிவிடுவது ஸாத்ய மில்லை. ஆயினும் முக்கியமான க்ஷேத்திரங்களை மட்டும் கூறுவேன். இங்கிருந்து தெற்குத் திசையிலுள்ள க்ஷேத்திரங் களுள் திருவேங்கட மலை, புஷ்கரமென்னும் தீர்த்தம், சாலக்ராமக்ஷேத்திரம், நைமிசாரண்யம், மதுரை, காசி, பிருந்தாவனம், மஹாபுண்யமான ரங்கக்ஷேத்ரம், உத்பலா வர்த்தகம் (திருக்கண்ணபுரம்), ஸ்ரீமுஷ்ணம், ஸ்ரீநிகே தனம், கும்பகோணம், கிருஷ்ண க்ஷேத்ரம் (திருக்கோவ லூர்), விஷ்ணுசயனம் (திருப்புல்லாணி) முதலிய க்ஷேத் திரங்கள் முக்கியமானவை இவைகளை காதுகளால் கேட்ட மாத்திரத்தில் ஸகல பாபங்களும் நாசமடையும்.

முனிவர்கள் :

வாமதேவரே! பல க்ஷேத்திரங்களின் பெருமையைச் சொன்னீர். இப்பொழுது இந்த பூமியிலுள்ள பல தீர்த்தங் களின் பெருமையைச் சொல்லுவீராக.

வாமதேவர் :

கங்கை, யமுனை, கோமதி, நர்மதை, துங்கபத்ரா, கிருஷ்ணபத்ரா (பெண்ணையாறு), பாலாறு, காவேரி, ஸஹ்யாமலகம், குருக்ஷேத்ரம், கயா, புஷ்கரதீர்த்தம், தாபீ, பயோஷ்ணி, சந்த்ரபாகா முதலிய முக்யமான தீர்த்தங்கள் இந்த பூமியில் இருக்கின்றன. அவைகளில் ஸ்னானம் செய்த அளவில ஸகல பாபங்களும் அழிந்து புண்யலோகங்களை அடைவார்கள். முனிவர்களே! உங்களுக்குத் தெரியாத தீர்த்தமோ க்ஷேத்ரமோ இந்தப் புவியிலில்லை. அப்படியிருந்தபோதிலும் தீர்த்தங்களையும், க்ஷேத்ரங்களையும் மறுபடியும் கேட்க வேண்டுமென்னும் ஆசையினால்தான் என்னை வினவினீர்கள்.

சௌனகர் :

இவ்வாறு சொல்லி வாமதேவர் மனமகிழ்ச்சியுடன் இருக்க அப்பொழுது அங்கு யாகத்திற்கு வந்த ஸகல தேவர்கள், முனிவர்கள், ஸித்தர்கள், கந்தர்வர்களும் யாவரும் ஜனகராஜனை முன்னிட்டுக்கொண்டு வாமதேவரைப் பூஜித்தனர்.

இவ்வாறு பாத்மபுராணம் க்ஷேத்ர கண்டத்தில்
கிருஷ்ணக்ஷேத்ர மாஹாத்ம்யத்தில்
முதலத்தியாயம் முற்றும்.

இரண்டாமத்தியாயம்

ருக்ஷி :

வாமதேவரால் இப்பொழுது ப்ரஸ்தாபிக்கப்பட்ட கிருஷ்ண க்ஷேத்திரத்தின் மஹிமையையும், அவ்வாறே

கிருஷ்ணபத்ரா நதியின் மஹிமையையும் எனக்கு சொல்வீராக.

சௌனகர் :

வாமதேவர் மூலமாக என்னால் எது எது கேட்கப்பட்டதோ அப்படியே சொல்லுகிறேன். ஒரு ஸமயம் ஸகல தேவர்களும் கூடி திருப்பாற்கடலின் கரையை அடைந்து தேவதேவனும், ஸ்ரீபதியும், நீருண்ட மேகம் போன்ற திருமேனி உடையவனும், சங்க சக்ர கதாதரனும், ஸர்வ லோகங்களுக்கும் இறைவனுமான ஸ்ரீமந் நாராயணனை ஸேவித்துத் துதித்தார்கள்.

தேவர்கள் :

தேவதேவனே ! பகவானே! ஜனார்தன! ஸர்வவ்யாபியாய் இருப்பவரே! அனாதர்களான எங்களுக்கு நீரே கதி, ஜகத் ப்ரபுவே! நீயே உலகைப் படைத்துக் காத்து அழிக்கிறீர். சரணாகதர்களான எங்கள் விஷயத்தில் கருணை செய்வீராக. உன்னிடம பக்தி செய்பவர்களுக்கு துக்கமே ஏற்படுவதில்லை.

சௌனகர் :

இவ்வாறு எல்லா தேவர்களாலும் துதிக்கப்பட்ட பகவான் மேகநாதம் போன்ற குரலால் அவர்களைப் பார்த்து அருளிச் செய்கிறான்.

ஸ்ரீ பகவான் :

ப்ரம்மதேவனே! கவனித்துக் கேட்பீராக. நான் திருவுள்ளம் உகந்து வஸிக்கும் தலங்களை உமக்குச் சொல்லுவேன். ஸ்ரீமுஷ்ணம், விஷ்ணு சயனம், ஸ்ரீ ரங்கம்,

ஸ்ரீ நிகேதனம், மஹாபுண்யமான கிருஷ்ணக்ஷேத்ரம், ஸ்ரீ ஸம்க்ஞாமலகம் முதலிய க்ஷேத்திரங்களில் நான் வஸிக்கிறேன். அவைகளில் ஸ்ரீ முஷ்ணத்தில் வாரஹ மூர்த்தியாயும், விஷ்ணுசயனத்தில் ராமனுயும், ஸ்ரீரங்கத்தில் சேஷசாயியாயும், ஸ்ரீ நிகேதனத்தில் ஸ்ரீதரனுயும், ஸம்க்ஞாமலக க்ராமத்தில் புருஷோத்தமனுயும், கிருஷ்ண க்ஷேத்ர மென்னும் திருக்கோவலூரில் கண்ணனுயும் காக்ஷியளிக்கிறேன். இந்த ரகஸ்யமான க்ஷேத்திரங்கள் உமக்கு விசேஷமாகச் சொல்லப்பட்டது. இந்த க்ஷேத்திரங்களில் எவர்கள் வஸிக்கின்றனரோ அவர்கள் எனது திருநாட்டில் தேவர்களால் பூஜிக்கப்படுவார்கள். இந்த க்ஷேத்ரங்களை அவசியம் ஸேவிக்க வேண்டும். அதுவும் விசேஷமாக வைஷ்ணவர்கள் அவசியம் ஸேவிக்க வேண்டும்.

ப்ரம்மா :

நாராயண! ஹரே ! கிருஷ்ண! ஜகன்னத! ஜனர்தன! உம்முடைய பல திவ்யக்ஷேத்திரங்கள் எமக்குச் சொல்லப்பட்டது. இவைகளில் விசேஷமாக எந்த க்ஷேத்திரத்தில் உம்மை தரிசிக்கலாம் ?

ஸ்ரீபகவான் :

உமக்குச் சொல்லப்பட்ட க்ஷேத்திரங்களுள் கிருஷ்ண க்ஷேத்திரமே மிகவும் சிறந்தது. அதற்கு நிகரான க்ஷேத்ரமே கிடையாது. அதில் நான் மிகவும் மன மூகந்து பக்தர்களின் விருப்பத்திற்காக வஸிக்கிறேன். அங்கு கிருஷ்ணபத்ரா நதியிலும் மற்ற தீர்த்தங்களிலும் ஸ்னனம் செய்து ஜபம், பாராயணம் முதலியவைகளை நடத்தினல் அனந்தமான பலன் ஸித்திக்கும்.

சௌனகர் :

இவ்வாறு சொல்லி சுருட வாஹனனுன பகவான் யாவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மறைந்தான்.

இவ்வாறு பாத்மபுராணம் க்ஷேத்ர கண்டத்தில்
கிருஷ்ண க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில் இரண்
டாம் அத்தியாயம் முற்றும்.

மூன்ருமத்தியாயம்

சௌனகர் :

பகவான் அந்தர்த்தானமடைந்ததும் ப்ரம்மா கிருஷ்ண க்ஷேத்ரமென்னும் திருக்கோவலூரை யடைந்து ஸஹ்யமலேயிலிருந்து உற்பத்தியாகும் கிருஷ்ணபத்ரா என்னும் பெண்ணே யாற்றைக் கண்டார்.

பிறகு முனிவர்களுடன் விஷ்ணுவை ஹ்ருதயத்தில் தியானித்துக் கொண்டு திருவஷ்டாக்ஷரத்தை ஜபித்துக் கொண்டே தீர்த்தத்தை சிரஸில் ப்ரோக்ஷித்துக் கொண்டு விதிப்படி தீர்த்தமாடினுர்.

இவ்வாறு அனுஷ்டானங்களே முடித்துக்கொண்டு விச்வகர்மாவனுல் நிர்மாணம் செய்யப்பட்ட திவ்யமான திருக்கோவிலேக் கண்டு அதனுள் சென்று (தேஹளீசனுன) பகவானே தரிசித்தார்.

சங்கு சக்கரம் இவைகளே தரித்தவனும், தாமரை போன்ற முகமுடையவனும், கிருபா நிதியும் பீதாம்பர

தாரியும், ஸர்வாபரணங்களும் அணிந்தவனும், இரு புறமும் ஸ்ரீதேவியாலும், பூதேவியாலும் ஸேவிக்கப்படு கின்றவனும், எதிரில் கருடனால் ஸேவிக்கப்படுகின்றவனு மான கிருஷ்ண பரமாத்மாவை கண்ணாரக் கண்டு ஸேவித்துத் தனது நான்கு முடிகளையும் தாழ்த்திப் பணிந்து துதிக்கின்றார்.

ப்ரம்மா :

ஸேவிப்பவரின் துன்பங்களைப் போக்குபவனே ; அருள் செய்க. உலகங்களுக்கு இறைவ! உலகைப் படைத் தவனே! அருள் செய்க. வேதமறிந்த யோகிகளுக்கும் காணக் கிடைக்காத நீர் என் கண்ணெதிரில் வந்து ஸேவை தருகிறீர். இது என் பாக்யம்.

உம்மை எங்கும் நிறைந்தவன் என்றும், மாறுபாடு அற்றவன் என்றும் பிறப்பிறப்பற்றவன் என்றும், ஸர்வ காரணமாயும் தனக்கொரு காரணமில்லாதவனாயும் இருப் பவன் என்றும் உபநிஷதங்கள் சொல்லுகின்றன.

அத்தகைய உம்மை வேதாந்தத்தில் நிச்சயம் உடைய பெரியோர்கள் தியானிக்கின்றனர். ஆனாலும் அவர் களுக்கு நீர் புலப்படவில்லை. இப்பொழுது என் எதிரில் கருணையால் காக்ஷி தருகிறீர்.

சௌனகர் :

இவ்வாறு துதித்து ப்ரம்மா உடனே பகவானை பக்தியுடன் புஷ்பம் சந்தனம், தூப தீபம், நைவேத்யம், தாம்பூலம் முதலியவைகளால் விதிபபடி ஆராதித்து ப்ரதக்ஷிண நமஸ்காரங்களையும் செய்தார். அப்பொழுது பகவான் மிகவும் மனமுகந்து ப்ரம்மாவைப் பார்த்து கம்பீரமான குரலுடன் பேசினான்.

பகவான் :

ஓ ப்ரம்மதேவனே! உனது பக்தியினுலும், பூஜை யினுலும், துதியினுலும் மிகவும் மனமகிழ்ந்தேன். தேவர் களுக்கும் முனிவர்களுக்கும் கூடக் கிடைக்காத என் தரிசனம் சிறந்த பக்தியினுலேயே உமக்குத் கிடைத்தது. இவ்வாறு தினமும் இந்த விமானத்தல் எழுந்தருளி யிருக்கும் என்னை பூஜை செய்து வருவீராக. உமக்கு வேண்டிய வரங்களைத் தருவேன்.

சௌனகர் :

இவ்வாறு பகவானின் அமுத வாக்கைக் கேட்ட பிரம்மன் மிகவும் மனமுருகி தலைதாழ்த்தி அடிபணிந்து கை குவித்துப் பிரார்த்தித்தான்.

பிரம்மா :

ப்ரபோ! உம்மை தர்சனம் செய்ய ஆசைப்பட்டு நான் பல காலம் காத்திருந்து செய்த தவமெல்லாம் பலித்தது. இதைவிட எனக்கு வேறு என்னதான் வரம் வேண்டும்? இந்த உலகில் பரமபதத்தை அடைய வேண்டி பல முனிவர் கள் தவமியற்றிப் பாடுபடுகின்றனர். ஆனுல் அவர்கள் செல்லும் வழி மிகவும் கடினமாயிருப்பதால் மனேரதம் நிறைவேருமல் கஷ்டப்படுகின்றனர். யாவரும் உம்மை நித்ய தர்சனம் செய்யும்படி அர்ச்சாவதாரத்தில் இருந்து கொண்டு தேவரீர் மனிதர்கள் ஸமர்ப்பிக்கும் பத்ரபுஷ் பாதிகளைக் கூட ஏற்றுக்கொண்டு பரமபதத்தை அனுக்ர ஹிக்க வேண்டும.

சௌனகர் :

இவ்வாறு சொல்லி பிரம்மா பகவானை துதித்துப் பிறகு விமானத்தை வலம் வந்து தனது ஸத்ய லோகத்

திற்கு ஹம்ஸ வாஹனத்தில் சென்றார். அப்பொழுது வழியில் ப்ரம்மாவைக் கண்ட உதத்யர் முதலிய தேவர்ஷி கள் அவருடனேயே ஸத்யலோகம் சென்றனர். அங்கு ப்ரம்மா தனது ஆஸனத்தில் அமர்ந்ததும் உதத்யர் அவரை ஸேவித்து 'தேவனே! தாங்கள் இப்பொழுது எங்கு சென்று வருகிறீர்'' என்று வினவினர். அப்பொழுது பிரமன், 'தேவர்ஷே! நான் கிருஷ்ணக்ஷேத்ரம் சென்று பக வானை தரிசித்துப் பெரும் பேறு பெற்றேன். நீரும் உஜ்ஜீ விக்க ஆசைப்படுவீராகில் அங்கு சென்று பகவானை ஸேவித்து வாரும், என்றார்.

இவ்வாறு பாத்மபுராணம் க்ஷேத்திர கண்டத்தில்
கிருஷ்ண க்ஷேத்திரமாஹாத்ம்யத்தில்
மூன்றுமத்தியாயம் முற்றும்

நான்காமத்தியாயம்

உதத்யர் :

பகவன்! தங்கள் முகமாக தாங்கள் சென்று வந்த கிருஷ்ண க்ஷேத்திரத்தின் மஹிமையைக் கேட்க விரும்பு கிறேன்.

ப்ரம்மா :

முனிவரே! அந்த க்ஷேத்திரத்தின் மகிமையை நூறு வருஷங்கள் என் முகமாகச் சொன்னாலும் சொல்லி மாளாது. ஆயினும் நீர் ச்ரத்தையாகக் கேட்பதால் சொல்லுகிறேன்.

தக்ஷிண ஸமுத்திரத்திலிருந்து மேற்கே ஐந்து யோஜனை தூரத்திலும், அவ்வாறே மேற்கு ஸமுத்திரத்திலிருந்து கிழக்கே எழுபது யோஜனை தூரத்திலும் கிருஷ்ணபத்ரா

நதியின் தென்கரையில் விச்வகர்மாவினுல் நிர்மாணம் செய்யப்பட்ட கிருஷ்ணக்ஷேத்திரம் இருக்கிறது. அந்த கிருஷ்ணபுரியின் நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டு ஐந்து யோஜனை தூரம் பெரியகாடு இருக்கிறது. அதற்கு 'கிருஷ்ணரண்யம்' என்று பெயர். மிகவும் பயங்கரமான அந்தக் காடு மதம் பிடித்த யானைகளாலும், புலி சிங்கம் முதலிய மிருகங்களாலும், பலவிதமான பக்ஷிகளாலும், ரீங்காரம் செய்யும் வண்டுகளாலும் சூழப்பட்டதாயிருக் கிறது. மேலும் அந்த வனம் புன்னகம், 'அசோகம். சம் பகம். அரசு, பலா, வாழை, கமுகு, தென்னை, கரவீரம், கர் ஜூரம், கருங்காலி முதலிய பல விருக்ஷங்களாலும், மல்லி, முல்லை, மாலதீ, ஜாதி முதலிய பல புஷ்பச் செடிகளாலும், எப்பொழுதும் ஜப தபாதிகளால் சோபிக்கின்ற பல முனி வர்களின் ஆசிரமங்களாலும் மிகவும் ரம்யமாக சோபிக் கிறது. அந்த வனத்தின் மத்தியில்தான் 'கிருஷ்ணபுரி' என்னும் ஊர் இருக்கிறது. அந்த நகரமானது மேக மண்டலம் வரை உயர்ந்ததும், மிகவும் வெண்மையாக சோபிக்கின்றதுமான பல திருமாளிகைகள் நிறைந்ததாக இருக்கிறது. அதன் நடுவில் உள்ள திருக்கோவிலில் இவ் வுலகையெல்லாம் படைத்துக் காத்து அழிக்கவல்ல பெரிய மாயாவியான விஷ்ணு உலக மாதாவான லக்ஷ்மி தேவி யுடன் நித்யவாஸம் செய்கிருன். அவனை தேவர்கள், முனி வர்கள், ஸித்தர்கள், வித்யாதரர்கள், யக்ஷர்கள், கின்னரர் கள், கந்தர்வர்கள் ,நாகர்கள், கருடர்கள் முதலிய யாவரும் தினந்தோறும் பலவிதமாகப் பூஜித்து வருகின்றனர். அந்த எம்பெருமானின் திருமேனியழகு வர்ணித்து மாளாது. ஆயினும் சொல்லுகிறேன்.

நீலமேகம் போன்ற காந்தியுடையவனும், திவ்ய பீதாம்பரம் அணிந்தவனும், கமலம் போன்ற திருவடிகள் உடையவனும், காற்சலங்கை அரைஞாண் மேகலை

கங்கணம தோள்வளே, கௌஸ்துபம், ஹாரம் பதக்கம் குண்டலம் கிரீடம் முதலிய ஸர்வாபரணங்களாலும ஒளி வீசுகின்றவனும், சரங்களில் சங்கு சக்ரம் முதலிய திவ்ய ஆயுதங்களைத் தாங்குகின்றவனும், கையினுல் பக்தர் களுக்கு அபயந்தருபவனும், மார்பில் ஸ்ரீவத்ஸமென்னும் பச்சத்துடன் கூடியவனும், லக்ஷ்மி தேவியுடன் ப்ரஸன்ன மாக எழுந்தருளியிருப்பவனும் கருணு மூர்த்தியுமான ஸ்ரீகிருஷ்ணக்ஷேத்திரத்தில் வஸிக்கும் ஸ்ரீ கிருஷ்ணனை யார் தியானம் செய்வார்களோ, அவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அடைவார்கள். எனவே முனிவர்களே! நீங்களும் அந்த கிருஷ்ணுரண்யம் சென்று கிருஷ்ண பத்ராவில் தீர்த்தமாடி அங்கு கிருஷ்ணபுரியில் எழுந்தருளியிருக்கும் கிருஷ்ணனை ஸேவித்து வாருங்கள். உங்களுக்கு எளிதில் பரமபதம் கிட்டும்.

இவ்வாறு ப்ரம்மா, உதத்யர் முதலிய முனிவர்களைப் பார்த்துச் சொல்லி ஓய்வடைந்தார்.

சௌனகர் :

ப்ரம்மாவின் வசனத்தைக் கேட்டஉதத்யர் முதலிய முனிவர்களும், மற்ற தேவர்கள், ஸித்தர்கள் யாவரும் வியப்படைந்தனர். பிறகு அவர்கள் யாவரும் பிரும்மா விடம் விடைபெற்றுக் கொண்டு கிருஷ்ண க்ஷேத்ரத்தை அடைந்தனர். அங்கு பத்ரா நதியில் விதிப்படி தீர்த்த மாடினுர்கள், பிறகு ஸ்ரீகர விமானத்தை ஸேவித்து அ சனுள்ளிருக்கும் பகவானை தரிசித்தார்கள். சங்க சக்கரங்களை தரிப்பவனும், அபய ஹஸ்தத்துடன் கூடிய வனும், கார்மேகம் போன்ற திருமேனி வண்ண முடைய வனும், கமலக் கண்ணனும், பீதாம்பரமணிந்தவனுமான பகவானை ஸேவித்துத் துதித்தனர்.

தேவர்கள் :

தேவ தேவனே! ஸர்வேச! பராத்பரனே ! எங்களுக்கு அருள் செய்க. மனதுக்கு எட்டாதவனும், புலன்களுக்கு எட்டாதவனும், மாறுபாடு அற்றவனும், எதிலும் அபேக்ஷையில்லாதவனும், எங்கும் நிறைந்தவனுமான உம்மை சரணடைந்தோம். தவம், தானம், யாகம், தீர்த்த யாத்ரை முதலிய பல நியமங்களுக்கும் கிட்டாதவனுன உம்மை இப்பொழுது ப்ரத்யக்ஷமாக ஸேவிக்கிறோம்.

சௌனகர் :

இவ்வாறு சொல்லி அந்த உதத்யர் முதலிய முனிவர்கள் பகவானை ஸேவிக்கும் போதே அங்கு எதிர் பாராமல் மறுபடியும் பகவானைப் பூஜிப்பதற்காக ப்ரம்மா வந்து சேர்ந்தார். அவர் ஸகல தேவர்களுடனும் முனிவர்களுடனும் பகவானை பூஜித்து விட்டுப் பிறகு உதத்யர் முதலிய முனிவர்களைப் பார்த்துச் சொல்லுவார்.

ப்ரமமா :

முனிவர்களே ! இந்த கிருஷ்ணாரண்ய க்ஷேத்ரம் உங்களுடைய தவத்திற்குத் தகுந்த இடமாகும். இந்த விமானத்திற்கு வடக்கே ஒரு அம்பு தூர அளவில் ஒரு ஆச்ரமம் உள்ளது. அது புண்யமான தீர்த்தம், விருக்ஷங்கள், பசு பக்ஷிகள இவைகளால் நிரம்பியது. அங்கு பல முனிவர்கள் தவமியற்றி வேண்டிய வரங்களைப் பெறுகின்றனர். நீங்களும் அந்த ஆசிரமத்திலேயே தங்கித் தவம் செய்வீர்களாக.

சௌனகர் :

இவ்வாறு சொல்லி முனிவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு ப்ரம்மா தனது லோகத்தை அடைந்தார்.

முனிவர்களும் அந்த விமானத்தின் ஒரு அம்பு மாத்ரமான தொலைவில் வாயு திசையில் தவம் செய்து பல வரங்களை எம்பெருமானின் கடாக்ஷத்தினுல் பெற்றுப் பிறகு பதரிகாச்ரமத்திற்குச் சென்றனர்.

இந்தக் கிருஷ்ண க்ஷேத்ர மாஹாத்ம்யத்தைப் படிப்பவர்கள் கேட்பவர்கள் யாவரும் ஸகல பாபங்களும் நீங்கப் பெற்று அறம் பொருள் இன்பம் வீடு முதலிய புருஷார்த்தங்களை அடைவார்கள். இந்த க்ஷேத்திரத்தின் மஹிமை ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனுலும் சொல்லி மாளாது. என்னுல் முடிந்த வரை சொன்னேன் என்று வாமதேவர் சொல்ல அப்பொழுது ஜனக ராஜன் அவரை மிகவும் கொண்டாடிப் பூஜித்தான்.

இவ்வாறு பாத்ம புராணம் க்ஷேத்ர கண்டத்தில்
கிருஷ்ண க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில்
நான்காமத்தியாயம் முற்றும்.

ஐந்தாவது அத்தியாயம்

சூஷி :

பிராமணரில் சிறந்த சௌனகரே! இந்த கிருஷ்ண க்ஷேத்திரத்தில் தான் மிருகண்டுவும் தவமியற்றினுர் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். மிருகண்டு என்பவர் மார்க்கண்டேயரின் தந்தையல்லவா? அவர் இங்கு எதற்கு தவமியற்றினுர். தாங்கள் ஸர்வக்ஞராக இருப்பதால் எனக்குச் சொல்ல வேண்டும்.

சௌனகர் :

முன்னொரு காலத்தில் 'மஹாபலி' என்று புகழ் பெற்ற அஸுரனொருவன் இருந்தான். அவன் தான், தர்மங்களில்

மிகவும் சிறந்தவனாக இருந்த போதிலும் தேவர்களை மிகவும் கஷ்டப் படுத்திக் கொண்டிருந்தான். அவனது கொடுமையைத் தாங்காது தேவர்கள், ஸித்தர்கள், முனிவர்கள் யாவரும் திருப்பாற்கடலையடைந்து பகவானை சரணடைந்தனர். அப்பொழுது ஸ்ரீமந் நாராயணன் அவர்களுக்குப் 'பிரத்யக்ஷமாகி மஹாபலியை அடக்குவதாக வாக்களித்து அபயங் கொடுத்து மறைந்து விட்டார். அந்த ஸமயத்தில் கச்யபர் தனது பார்யையான அதிதியுடன் புத்ரன் வேண்டுமென்று புத்ரகாமேஷ்டி செய்தார். அப்பொழுது யக்ஞ புருஷனான நாராயணன் வாமன மூர்த்தியாக அவதரித்தான். வாமன பகவான் ப்ரம்மசர்ய ஆச்ரமம் பெற்றதும் பலிச் சக்ரவர்த்தியிடம் பூதானம் வேண்டி வந்து சேர்ந்தான். இவ்வுலகைப் படைத்த ஸர்வேச்வரனே வாமன ரூபியாக வந்திருக்கிறான் என்று அறியாத பலிச் சக்ரவர்த்தி அவருக்கு விசேஷமாக பூஜை செய்து எது வேண்டுமானாலும் தானம் செய்வதாக வாக்களித்தான். அது கேட்டு உள்ள முகந்த எம்பெருமான், "அப்படியாகில் என் திருவடிகளால் மூன்றடி மண் கொடு" என்று கேட்டான்.

வாமன மூர்த்தியான ஹரியின் கபடத்தைக் கண்ட சுக்ராசார்யார் தனது சிஷ்யனான மஹாபலியிடமுள்ள பரிவினால் 'வந்திருப்பது பிராமணனல்ல. மாயா ப்ரம்மசாரியான விஷ்ணுவேதான்' என்று சொல்லிக் காட்டிக் கொடுத்து விட்டார் ஆனால் தைர்யசாலியான பலியோ ஸாக்ஷாத் திருமகள் கேள்வனான நாராயணனே என்னிடம் கை நீட்டி தானம் வாங்குவது எனக்குப் பெருமையே. என்னிடம் தானமும் பெற்றுக் கொண்டு என்னை நிக்ரஹம் செய்தாலும் அல்லது அனுக்ரஹம் செய்தாலும் சொன்ன சொல் மீற மாட்டேன என்று சொல்லி குருவை மீறி பகவானுக்கு மூன்றடி தானம் செய்து விட்டான்.

அப்பொழுது பகவான் உடனே வாமன ரூபத்தை விட்டு விராட் புருஷ ரூபததை எடுத்துக் கொண்டு ஒரு திருவடியால் பூமியையும், மற்ருெரு திருவடியால் விண்ணுலகையும் அளந்தான். அப்பொழுது த்ரிவிக்ரம ரூபத்தைக் கண்ட தேவர்கள், முனிவர்கள், ஸித்தர்கள், கின்னரர்கள் யாவரும் பலவாறு துதித்துக் கொண்டாடினுர்கள். ப்ரம்ம தேவனும் உயரத்தூக்கப்பட்ட திருவடியில் தனது கமண்டலுவிலுள்ள தீர்த்தத்திஞல் பாத்யம் கொடுத்து பூஜித்தான். அந்த பாத்ய தீர்த்தமே கங்கையென்னும் பெயருடன் உலகில் பெருகி ஓடுகிறது.

மூன்று அடி தருவதாகச் சொன்ன மஹாபலியின் சொல்படி பூலோகத்தையும் சுவர்க்கத்தையும் இரண்டு அடிகளாக அளந்து விட்டபடியால் மூன்ருவது அடி எங்கே என்று கேட்டு பகவான் மஹாபலியை அதட்டினுன். இறைவன் பெருமையை அறிந்த மஹாபலி, "தேவ தேவ! எனது ஸத்யத்தைக் காப்பாற்ற வேண்டியது உமது கடமை. உமது திருவடியால் அடியேனது தலையை அளந்து கொண்டு என் உடைமை யாவையும் உமதாக ஏற்றுக் கொண்டது போல் அடியேனையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று வேண்டினுன். உடனே பகவானும் மஹாபலியின் தலை மேல் தனது திருவடியை வைத்து அனுக்ரஹித்து 'இரண்டு லோகமும் எனக்கு தானம் கொடுத்துவிட்டபடியானதிஞல் இனி இங்கு இருக்கக்கூடாது; பாதாளத்திற்குப் போ'வென்று சொல்லி அனுப்பினுன். அவனிடம் கருணையுடன் பகவானும் அவன் பாதாளத்தில் இருக்குமிடத்தில் தானே வாசற்காப்பாளனுக இருந்து அவனுக்குக் காக்ஷியளிக்கிருன்.

தேவர்கள், முனிவர்கள் யாவரும் தங்கள் காரியம் பலித்துவிட்ட படியால் பகவானைத் துதித்தனர் இந்திரனிடம் மூவுலக ராஜ்யததையும் கொடுத்து விட்டு சங்க

சக்ர தாரியான பகவான் யாவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறைந்து விட்டான்.

இந்த ஸம்பவம் நடந்த போது மிருகண்டு முனிவர் எங்கேயோ தவம் செய்யப் போயிருந்த படியால் இந்த அவதாரத்தை தரிசனம் செய்ய முடியவில்லை. பிறகு முனிவர்கள் மூலமாக பகவான் உலகை அளந்த கதையைக் கேட்டு அந்த அவதாரத்தை தான் ஸேவிக்கவில்லையே என்று மிகவும் வருந்தினர். பிறகு பகவான் திரிவிக்ரம ரூபத்தில் தர்சனம் தரும் வரை அன்ன பானமில்லாமல் கடுமையாகத் தவமியற்றுவேன் என்று தீர்மானித்தார். கயை, புஷ்கரம், பதரி முதலிய பல க்ஷேத்திரங்களில் பல்லாயிரக் கணக்கான வருஷங்கள் தவமியற்றினர். அப்பொழுது அவருக்கு திரிவிக்ரமன் தரிசனம் தரவில்லை. பிறகு ஸமுதரத்தில் புகுந்து பிராணனை அடக்கி ஆயிரம் வருஷம் தவம் செய்தார்.

அப்பொழுது அவருக்கு நாரதர் ப்ரத்யக்ஷமானர். மிருகண்டுவின் எதிரில் நாரதர் வீணையுடன் ஹரியின் குணங்களைப் பாடினர். அதைக் கேட்டு நிஷ்டை கலைந்த மிருகண்டு எழுந்து மிகவும் ஸந்தோஷத்துடன் நாரதரை துதித்தார். ''மூவுலகிலும் பூஜிக்கத்தக்க பரம வைஷ்ணவரான நீர் எனது மஹத்தான தவத்தின் பயனாகக் காணக் கிடைத்தீர். இப்பொழுது எனக்கு திரிவிக்ரம பகவானை ப்ரத்யக்ஷமாகப் பார்க்க வழி சொல்ல வேண்டும்'' என்று வேண்டினர்.

இதைக் கேட்ட நாரதர் ''ஓ முனிவரே! அது மிகவும் துர்லபம். கடுமையான தவங்களுக்கு விஷ்ணு விஷயமாக மாட்டான். அவனுக்கு யாரிடம் கிருபை உண்டாகிறதோ அவர்களுக்கு மட்டிலுந்தான் ஸுலபனாக இருக்கிறான். அந்த திரிவிக்ரமனின் திருவடியைப் பூஜிக்கும் பாக்யம்



திருக்கோவலூர்-உத்ஸவர் ஸ்ரீபுஷ்பவல்லீ சமேத தேஹளீசர்

ப்ரம்ம தேவனுக்கு ஸுலபமாய்க் கிடைத்தது. எனவே அவரைக் குறித்துத் தவம் செய்தால் உமக்கு அவர் சுலபமான வழியைச் சொல்லுவார் என்றார்.

நாரதரின் வசனத்தைக் கேட்ட மிருகண்டு உடனே ப்ரும்பாவைக் குறித்துக் கடுமையான தவம் செய்யலானார். பஞ்சாக்னி மத்தியில் உட்கார்ந்து ஆஹாரம், பானம் இவைகளை விட்டு விட்டுப் பிராணாயாமம் செய்து புலன் களை அடக்கி நாசியின் நுனியில் பார்வையை நிறுத்தி காயத்ரியை ஜபம் செய்து கொண்டு மிகக் கடுமையான தவம் செய்தார். அவருடைய தவத்தினால் தாக்கப்பட்ட தேவர்கள் ஓடி ப்ரம்மாவை சரணடைந்து தெரிவித்துக் கொண்டனர். உடனே ப்ரம்மனும் ஹம்ஸவாஹனத்தில் ஏறி மிருகண்டுவிடம் வந்து காக்ஷி தந்தார். பிரம்ம தேவனைக் கண்ட மிருகண்டு வெகுவாகத் துதித்துத் தனக்கு த்ரிவிக்ரமனின் தரிசனம் ஏற்பட வேண்டுமென்று வரம் கேட்டார். அதற்கு ப்ரம்மா மிகவும் மனமுகந்து மிருகண்டுவைப் பார்த்துச் சொன்னார்.

ப்ரம்மா :

கயை, புஷ்கரம், பதரி முதலிய பல இடங்களிலும் தவமியற்றி நாரதரைக்கண்டு முடிவில் இந்த ஸமுத்திரத் தில் பல்லாயிரயாண்டு தவமியற்றி என்னையும் தரிசனம் செய்திருக்கிறீர். எனவே உமக்கு அவசியம் அந்த திரி விக்ரமனின் தரிசனத்திற்கு வழி சொல்லுகிறேன். கவன மாய்க் கேட்பீராக. கிருஷ்ணபத்ரா என்றொரு நதியின் கரையில் கிருஷ்ணாரண்யம் என்னுமொரு பெரிய காடு உள்ளது. அந்த கிருஷ்ணபத்ரா நதியின் தெற்குக் கரையில் கிருஷ்ணபுரி என்னும் ஒரு மஹாக்ஷேத்திரம் உள்ளது. அந்த க்ஷேத்திரத்தில் கிருஷ்ணன் என்கிற திரு

நாமத்துடன் பகவான் எழுந்தருளியிருக்கிறன். நீர் அங்கு சென்று தவமியற்ற வேண்டும். மேலும் ஏழைகளுக்கும் அதிதிகளுக்கும் அன்னதானம் செய்ய வேண்டும். அப்படிச் செய்வீராகுல் பகவான் உமக்குத் த்ரிவிக்ரமனுகத் தரிசனந் தருவான்.

சௌனகர் ;

இவ்வாறு ப்ரம்மா சொல்லி விட்டுத் தனது இருப்பிடத்தை அடைந்தார். மிருகண்டுவும் தனது பார்யையான மித்ரமதி என்பவளுடன் கிருஷ்ணூரண்யத்தை அடைந்தார்.

மிகவும் தூய்மையான ஜலமுடையதும், பல முனிவர்களால் ஸேவிக்கப்படுகின்றதுமான கிருஷ்ணபத்ரா நதியைக் கண்டார். அதன் ஸமீபத்தில் மாதவி, மாலதி, புன்னுகம். சப்பகம் முதலிய புஷ்பங்களின் ஸுகந்தம் வீசுவதும், தேவர்கள், முனிவர்கள், ஸித்தர்கள், கின்னரர்கள், கந்தவர்கள் இவர்களால் ஸேவிக்கப்படுகின்றதும், குயில், மயில்' மான், கிளி முதலிய ஜந்துக்களால் ரம்யமான புண்ணியமான ஆச்ரமததைக் கண்டார். அங்கு மித்ரவதியுடன் மிருகண்டு பலவிதமான காயக்லேசங்கள் செய்து, தவமும் பல யக்ஞங்களும், ஹோமங்களும், தான தர்மங்களும் நடத்தி வந்தார். இவ்வாறு பல ஆண்டுகள் கடந்தன. ஒரு ஸமயம் ஒரு விருதத பிராம்மணன் தனது மனைவியுடன் ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தார். அவனை மிருகண்டு அன்புடன் அழைத்துப் பூஜித்தார். வந்த பிராம்மணனே மிருகண்டுவைப் பார்த்து முனிவரே! நான் வெகு தூரத்திலிருந்து வருகிறேன். மிகவும் களைப்படைந்துள்ளேன். இந்த என் மனைவியும் பசியினுலும், தாகத்தினுலும் வருந்துகிருள். எனவே எங்களுக்கு இந்தக்ஷணமே அன்னதானம் செய்வீராக என்ருர். இதைக் கேட்ட மிருகண்டு இந்த வேளையில் வீட்டில் ஒரு பருக்கை கூட [illegible]

மில்லை. ஆனால் இவருக்கு இல்லை என்று சொன்னால் நம் தவமெல்லாம் நஷ்டமாகிவிடும். இவரோ அகாலத்தில் வந்து கேட்கிறார். ஒருக்கால் இவர் ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணன்தானோ என்னவோ என்று மனதுக்குள் சிந்திக்கலானார். உடனே உள்ளே ஓடித் தனது மனைவியைப் பார்த்து "மித்ரவதி! வாசலில் ஒரு முதிர்ந்த வேதிய தம்பதிகள் பசியால் அன்னம் யாசிக்கின்றனர். அவர்களுக்கு உனது கற்பின் பெருமையால் எப்படியாவது அன்னம் போடு" என்றார். இதைக் கேட்ட மித்ரவதி மஹாலக்ஷ்மியைத் தியானித்தாள். தேவியின் திருவருளால் நல்ல மிருஷ்டான்னம் பரிபூர்ணமாய்க் கிடைத்துவிடவே மிருகண்டுவிடம் தெரிவித்தாள்.

உடனே முனிவரும் அந்தப் பிராம்மணனை அழைத்து அவருடைய மனைவியுடன் அமுது செய்வித்தார். திருவுள்ளம் உகந்த வேதியன் மறுகணமே தனது திவ்ய தரிசனத்தைத் தந்தான். இடது கையில் சக்கரமும், வலது கையில் சங்கமும், நீருண்ட மேகம் போன்ற திருமேனியும், திவ்ய பீதாம்பரமும, மார்பில் ஸ்ரீவத்ஸமும், கண்டத்தில் கௌஸ்துபமும், காதுகளில் மகர குண்டலமும, கமலக் கண்களும், பிரம்மலோகம் வரை உயரத் தூக்கப்பட்ட திருவடியும், உலகை அளந்த மற்றொரு திருவடியும், வைஜயந்தி வனமாலையும், ப்ரஹ்லாதன், பலி, சுக்ராசார்யர், முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம மஹர்ஷிகள், யக்ஷர்கள் ஸித்தர்கள், கருட விஷ்வக்ஸேனாதிகள் புடை சூழ்ந்து கொண்டாட ஸ்ரீ தேவி பூதேவியுடன் தனது திரிவிக்ரம ரூபத்தை மிருகண்டுவிற்குக் காட்டியருளினான்.

இவ்வாறு பகவானைக்கண்ட முனிவர் ஆடினார்; பாடினார்; கண்ணீர மல்கக் கை குவித்த வண்ணம் "தேவ!

அருள்செய்க'' என்று வேண்டினர். அவரது துதியைக் கேட்ட பகவான் மிருகண்டுவைக் குளிரக் கடாக்ஷித்துச் சொல்லுகிறன்.

பகவான்.

முனிவரே! வெகு ஆண்டுகளாக நம்மைக் காண வேண்டிக் கடுந்தவமியற்றினீர். உமது பக்திக்கு நாம் வசமாகி நம்முடைய உலகளந்த திருமேனியைக் காட்டியருளினேம். இன்னமும் உமக்கு என்ன அருள் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்ளும்.

மிருகண்டு:

ஜனர்தன! அச்சுத! நாராயண! ஹரே! தேவ துர்லபமான உமது தரிசனம் பெற்றேன். இதற்கு மேலும் நாம் பெறுவது என்ன இருக்கிறது? ஆயினும் இந்தத் திரிவிக்ரம ரூபத்தில் உம்மைக்காண எனக்கு சக்தியில்லை. எனவே ஸ்ரீதேவியுடனும் பூதேவியுடனும் சதுர்ப்புஜ ரூபத்தில் காக்ஷி தருவீராக.

சௌனகர்:

இவ்வாறு வேண்டப்பட்ட பகவான் ஸ்ரீதேவி பூதேவிகளுடன் சதுர்ப்புஜ ரூபத்தில் தரிசனந்தந்தான். திரிவிக்ரமனை ஜாம்பவான் பலதடவை ப்ரதக்ஷிணம் செய்தார். ப்ரம்மாவும் த்ரிவிக்ரமனின் திருவடிகளில் பாத்யம் கொடுத்து பூஜித்தார். ப்ரம்மா முதலிய தேவர்கள் பகவானைத் துதித்தார்கள்.

தேவர்கள்:

ஆயிரக்கணக்கான திருமுகமும் உடையவரும், ஆயிரக்கணக்கான திருவடி உடையவரும், புருஷோத்தமனும், வேதப்பொருளுமான உமக்கு நமஸ்காரம்.

ஸர்வகாரணரும், தனக்கொரு காரணமில்லாதவரும், தேவதேவனும், சரண்யனும் ஸர்வலோகேச்வரனும் பகவானுமான உமக்கு நமஸ்காரம்.

தாமரைக் கண்ணனே ஜய ஜய! தாமோதரா! ஜனார்தன! ஸ்ரீ நிவாஸ! ஜய ஜய. தேவ தேவ! வாஸுதேவ லக்ஷ்மீ நாத! சங்க சக்ர கதாதர! ஜய ஜய

சௌனகர்:

இவ்வாறு ஸகல தேவர்களாலும் வேண்டப்பட்ட பகவான் மிருகண்டுவைப் பார்த்து மறுபடியும் உமக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டார். அப்பொழுது முனிவர், ''என்னப்பனே! இந்த ஸம்ஸாரக் கடலில் பல கஷ்டப்பட்டு நொந்தேன். உமது திருவடியை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டும்'' என்று கேட்டார். உடனே பகவான், ''முனிவரே! வருந்த வேண்டாம். நாம் எவ்வளவு காலம் இந்த க்ஷேத்திரத்தில் ப்ரஸன்னமாகி அர்ச்சாவதாரத்தில் இருப்போமா அவ்வளவு காலம் நீரும் எம்முடைய திருவடி நிழலில் வஸித்துப் பிறகு நம்முடன் பரம பதத்தையும் அடைவீராக'' என்றார். அப்பொழுது கோடி ஸூர்ய ப்ரகாசமான ஸ்ரீகர விமானம் அங்கு தோன்றியது. அதனுள் எம்பெருமான் காக்ஷி கொடுத்தான். மிருகண்டுவும் பகவானின் திருவடி ஸமீபத்தில் நின்றார். இந்த கிருஷ்ண க்ஷேத்ர மஹிமையை எவர்கள் படித்துக் கேட்பார்களோ பிறவி அவர்களுக்குக் கிடையாது.

இவ்வாறு பாத்மபுராணம் க்ஷேத்ர கண்டத்தில்
கிருஷ்ணக்ஷேத்ர மாஹாத்ம்யத்தில்
ஐந்தாமத்தியாயம் முற்றும்.

ஆருவது அத்தியாயம்

குக்ஷி:

இந்த கிருஷ்ண க்ஷேத்திரத்தில் உள்ள மற்ற தீர்த்தங்களின் வைபவங்களையும் எனக்குச் சொல்லவேண்டும்.

சௌனகர்:

மிருகண்டுவினுல் தரிசிக்கப்பட்ட த்ரிவிக்ரம ரூபத்தை வர்ணித்தேன் அவ்வாறே ஸ்ரீகரவிமானத்துடன் அந்த பகவான் இந்த க்ஷேத்திரத்தில் மிருகண்டுவினுல் நித்யமும் ஆராதிக்கப்பட்டு இங்கு ஸுப்ரஸன்னனுகி இருப்பதைச் சொன்னேன். மேலும் பல தீர்த்தங்களின் மஹிமையைச் சொல்லுகிறேன்; கேளீர். பகவான் உலகளந்த திருமேனியுடன் ப்ரம்மலோகம் வரை திருவடியைத் தூக்கிய போது பிரம்மதேவன் தனது கமண்டலு ஜலத்தினுல் பாத்யம் கொடுத்து பூஜித்தான். அந்த பாத தீர்த்தமானது சக்ர தீர்த்தம் என்று சொல்லப்படுகிறது. ஒரு ஸமயம் செல்வத்தினுல் கொழுப்படைந்த இந்திரன் துர்வாஸரை மதிக்கவில்லை. எனவே துர்வாஸ முனிவர் தேவேந்திரா! நீ லக்ஷ்மீ கடாக்ஷம் இல்லாதவனுகப் போ என்று சபித்தார். தேவேந்திரனும் அஸுரர்களால் போரில் முறியடிக்கப்பட்டு மிகவும் ஏழையானுன். இதற்குக் காரணம் துர்வாஸ சாபந்தான் என்று உணர்ந்து இந்த சக்ர தீர்த்தக் கரையில் கடுமையான தவம் செய்து த்ரிவிக்ரமனே ஆராதித்தான். பிறகு உலகளந்தப் பெருமானின் திருவருளால் லக்ஷ்மீ கடாக்ஷம் பெற்று மறுபடியும் அஸுரர்களைத் தோற்கடித்து செல்வத்தை திருப்பியடைந்தான். இந்த தீர்த்தத்தில் சித்ரா பௌர்ணமியன்று ஸ்னனம் பண்ணினுல் விசேஷமான பலன்கள் கைக் கூடும். அவன் ஸ்வர்கத்தை யடைந்து தேவர்களால் கொண்டாடப்படுவான்.

பகவானின் கிழக்குத் திசையில் சங்க தீர்த்தம் என்று சொல்லப்படுல் ஒரு தீர்த்தம் உண்டு. அங்கு குஹன் தவம் செய்து வாஸுதேவனை ப்ரத்யக்ஷமாக்கினன். அதில் தைப் பூசத்தில் ஸ்னனம் செய்வது வாஜபேய யாகம் செய்த பலனைத் தரும்.

மேலும் க்ஷேத்திரத்தின் வடக்குப் பக்கத்திலும், தென் பக்கத்திலும் பிண்டஸ்தானம், ருணமோசனம் என்னும் தீர்த்தம் உள்ளது. அதில் ஆடி மாஸத்தில் ரேவதி நக்ஷத்திரத்தில் ஸ்னனம் செய்து ஒரு நெல்லிக் காயளவாவது பித்ருக்களுக்குப் பிண்டம் திலோதகம் இவைகள் தந்தால் பித்ரு கடனிலிருந்து விடுபடுவான். எவன் ஐந்து தினங்கள் இந்தத் தீர்த்தக் கரையில் தங்கி பகவானை ஆராதிக்கிருனே அவன் விஷ்ணுலோகத்தை அடைகிருனென்பதில் ஸந்தேஹமில்லை.

கிருஷ்ண க்ஷேத்ரத்தின் ஈசான திக்கில் சர்கதீர்த்தம் என்ருெரு தீர்த்தம் உண்டு. அதில் ஸுகுணன் என்ற பிராம்மணன் தவம் செய்து ப்ரம்ம லோகத்தை அடைந்தான். அதில் மாசி மாதத்தில் சதுர்த்தியில் ஸ்னனம் செய்வது விசேஷ பலனைத் தரும்.

அவ்வாறே மேற்கு திசையில் கிருஷ்ணபத்ரா நதியின் வடகரையில் ஆகாச கங்கை என்ருெரு தீர்த்தமுண்டு. அதன் கரையில்தான் பிரும்மதேவன் தவம் செய்து த்ரிவிக்ரமனைப் பூஜித்தான். அதில் ஆவணி மாதத்தில் ஹஸ்த நக்ஷத்திரத்தில் பானு வாரமும் சேர்ந்திருக்கத் தீர்த்தமாடினுல் ஸகல யாகங்களும் செய்த பலனை அடைகிருன்.

பத்ரா நதியின் கரையிலேயே மேற்குத் திசையில் மற்ருெரு தீர்த்தமுண்டு. அதன் பெயர் வராஹ தீர்த்தம். அதன் கரையில் பரசுராமர் கடுந்தவமியற்றி தான்

கோரமான க்ஷத்ரியவதம் செய்த பாபம் நீங்கப் பெற்றார். அதில் தனுர் மாதத்தில் உத்திராட நக்ஷத்திரத்தில் தீர்த்தமாடுபவன் விஷ்ணுலோகத்தை அடைவான். இந்த தீர்த்தத்தின் மேற்கில் அரையோஜனை தூரத்தில் அகஸ்த்ய தீர்த்தமுள்ளது. அதில அகஸ்த்யர் தவம் செய்து பகவானின் கருணையைப் பெற்றார் இதில் ஆனி மாதத்தில் ஹரிவாஸரத்தில் தீர்த்தமாடி பகவானை ஆராதிப்பவன் விஷ்ணு லோகத்தையடைவான்.

தெனமேற்கு திசையில் காலவ தீர்த்தம் என்றொரு தீர்த்தமுண்டு. அது சுத்தமான ஸ்படிகம் போன்ற ஜல முடையது. அதில் எவர்கள் தீர்த்தமாடுகின்றனரோ அவர்கள் ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுபடுகின்றனர். பகவானின் மேற்கு திசையில் மிருகண்டு தீர்த்தமிருக்கிறது. அதில் துலாமாதத்தில் ஒரு நாள் தங்கி உபவாஸம் செய்து தீர்த்தமாடினால் புத்ரன், ஆயுள், தனம், தான்யம், ஆரோக்யம் இவைகளைப் பெற்று முடிவில் பரமபதத்தை யும் அடைவான்.

த்ரிவிக்ரமனின் வடக்கு திசையில் கிருஷ்ண பத்ரா என்ற நதி ஓடுகிறது. இந்த தீர்த்தத்தின் மஹிமை சொல்லி முடியாது. ப்ரும்மா கங்கையைத் தனது கலசத்தால் எடுத்து உலகளந்த பெருமானை ஆராதித்தார். பகவானின் அந்தப் பாததீர்த்தமே பெண்ணையாறாக ஓடுகிறது. இது ஸஹ்ய பர்வதத்திலிருந்து பெருகிக் கடலை நோக்கி ஓடுகிறது. இதன் கரையில் தங்கி அன்னதானம் செய்பவர்கள ஸகல ஸௌபாக்யங்களையும் அடை கின்றனர். இந்த தீர்த்தத்தை தர்சித்தால் ரோகங்கள் நாசமடைகின்றன. இந்த தீர்த்தத்தைத் தொட்ட மாத்திரத்தில் பாபங்கள் நசிக்கின்றன. இந்த தீர்த்தத்தைக் குடித்த மாத்திரத்தில் ஸகல மனோரதங்களும் பலித்து விடுகின்றன. இந்த தீர்த்தத்தில் நீராடினால் பரமபதம்

கிடைத்துவிடுகிறது. கங்கை ப்ரயாகை, கயை, முதலிய பல தீர்த்தங்கள் உலகில் இருக்கின்றன. ஆனால் அவை உடனேயே பாவனமாக்குவதில்லை ஹரிபாத தீர்த்தமோ உடனேயே ஜீவ கோடிகளை பாவனமாக்கி விடுகிறது. எவன் அஷ்டாக்ஷரத்தை ஜபித்துக் கொண்டு பெண்ணை யாற்றில் தீர்த்தமாடி கிருஷ்ணனை ஸேவிக்கிறானோ அவன் மறுபிறவியை அடைவதில்லை.

கிருஷ்ண க்ஷேத்ரத்தைச் சூழ்ந்த ஐந்து யோஜனை தூரம் கிருஷ்ணாரண்யமெனப்படும். இந்த கிருஷ்ணாரண்யத்தில் எவன் தேஹத்தை விடுகிறானோ அந்த பாக்யவான் வைகுண்டத்தை யடைகிறான். எவனொருவன் கிருஷ்ண க்ஷேத்திரத்தில் இருக்கும் கோவிலின் விமானத்தை வெகு தூரத்திலிருந்தும் தரிசனம் செய்கிறானோ அவன் பாபங்களிலிருந்து விடுபடுகிறான். விஷ்வக்ஸேனருடைய ஆக்ஞையால் பல விஷ்ணு தூதர்கள் இந்த விமானத்தை ரக்ஷித்து வருகின்றனர். எவனாவது இந்த விமானத்தைக் கெடுப்பானாகில் அவன் கோரமான நரகத்தை யடைவான். பாதாளகேது என்னும் ராக்ஷஸன் இந்த விமானத்தில் அபராதம் செய்து ஒரு ராஜகுமாரனால் கொல்லப்பட்டு கொடிய நரகத்தை அடைந்தான். எவர்கள் இந்த விமானத்தை தரிசனம் செய்து த்ரிவிக்ரமனை ஸேவிக்கின்றனரோ அவர்கள் உத்தம கதியை அடைகின்றனர்.

இவ்வாறு கிருஷ்ண க்ஷேத்திரத்திலுள்ள ஸகல தீர்த்தங்களுடையவும், விமானத்தினுடையவும் மஹிமை யானது சொல்லப்பட்டது. இன்னமும் என்ன கேட்க விரும்புகிறாய்?

இவ்வாறு பாத்மபுராணம் க்ஷேத்திர கண்டத்தில்
கிருஷ்ண க்ஷேத்ரமாஹாத்ம்யத்தில்
ஆறுமத்தியாயம் முற்றும்

ஏழாவது அத்தியாயம்

ருஷி:

பாதாளகேது என்னும் அரக்கன் கிருஷ்ணக்ஷேத்திரத்தில் அபராதம் செய்து அரசனால் கொல்லப்பட்டு நரகமடைந்தான என்று சொன்னீரே, அந்தக் கதையை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்.

முன்பொரு காலததில் இந்த க்ஷேத்திரத்தில் காலவர் என்பவர் கடுந்தவம் செய்து வந்தார். அவரை ஆச்ரயித்து அவரது ஆச்ரமத்தில் பல முனிவர்கள் தவமியற்றி வந்தனர். மிகக் கொடிய பாதாளகேது என்னும் அஸுரன் ப்ரம்ம தேவனைக் குறித்துத் தவமியற்றிக் கொடிய வரன்களைப் பெற்று மிகவும் கர்வமடைந்திருந்தான். அவன் பல தேவர்களையும், முனிவர்களையும், மனிதர்களையும் துன்புறுத்தி வந்தான். அவனது பெயரைக் கேட்டாலே உலகில் யாவருக்கும் பயம். ஒரு நாள் அவன் கிருஷ்ண க்ஷேத்திரத்திலுள்ள முனிவர்களைக் கொன்று தின்னுவதற்காக ஓடி வந்தான். அவனைக் கண்ட காலவர் முதலிய முனிவர்கள் பயந்து ஓடி த்ரிவிக்ரமனை சரணடைந்தனர்.

"தேவ தேவ! கமலக் கண்ணு! மாதவ! இறைவ! லக்ஷ்மீ காந்த! உலகைப் படைத்தவனே! ஸ்ரீதர! சக்ரபாணே! பாதாளகேது என்னும் ஒரு அரக்கன் எங்கள் யாவரையும் கொல்லுவதற்காக வருகிறுன். சரணுகதி செய்த எங்களை ரக்ஷிக்க வேண்டும்" என்று வேண்டினர். அதற்கு பகவான் "முனிவர்களே! நீங்கள் வருந்த வேண்டாம். பயப்படாமல் ஆச்ரமத்திற்குச் செல்லுங்கள். நான் அந்த துஷ்டனை வதம் செய்து உங்களை ரக்ஷிக்கிறேன்" என்று சொன்னுன். உடனே முனிவர்கள் ஆறுதலடைந்து ஆச்ரமத்தையடைந்தனர்.

பாதாளகேதுவோ மறுபடியும் வந்து விட்டான். அவனைக் கண்ட முனிவர் உலகளந்த பெருமானைத் தியானம் செய்தார்; அப்பொழுது அங்கு உடனேயே குசத்வஜன் என்னும் அரசனும் வந்தான். அவனைக் கண்ட காலவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து அவனை உபசரித்தார். அரசனை ஆச்ரமத்தில் அழைத்துப் பூஜை செய்து வேண்டினார்.

காலவர் :

அரசே! இந்த க்ஷேத்திரம் கிருஷ்ணாரண்யம் எனப் படும். இதில் முனிவர்களாகிய நாங்கள் எம்பெருமானை தவத்தினால் ஆராதித்து வருகிறோம். அதோ அந்த கோவில் உலகளந்த விஷ்ணு எழுந்தருளியிருக்கும் திவ்யமான ஸன்னிதியாகும். அதனுடைய விமானத்தை தரிசனம் செய்தாலேயே ஸகல பாபங்களும் போகும். இந்தக் கோவிலில் எவர்கள் பெருக்கி மெழுகிக் கோலமிடுகின்றனரோ அவர்கள் ஸ்வர்க்கத்தில் தேவர்களால் பூஜிக்கப் பட்டுப் பரமபதத்தை அடைகின்றனர். எவர்கள் தூபம் தீபம் முதலிய கைங்கர்யம் செய்கின்றனரோ அவர்களு டைய பித்ருக்கள் பரமகதி யடைகின்றனர். எவர்கள் தாளவாத்யங்களுடன் பெருமாள் ஸன்னிதியில் ஆடிப்பாடி அவனைக் கொண்டாடுகின்றனரோ அவர்கள் முகதியடை கின்றனர். இந்தப் பெருமாளை தினமும் பூஜிப்பவர்கள், தரிசிப்பவர்கள் யாவரும் விரும்பிய பலனைப் பெற்று முக்தி பெறுகின்றனர். எனவே இந்த க்ஷேத்திரத்தில் நாங்கள் விரும்பித் தவம் செய்கிறோம். ஆனால் பாதாளகேது என்னும் அரக்கன் எங்களைக் கொலை செய்ய விருமபுகிறான். அவனை வதம் செய்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்.

சௌனகர்:

இதைக் கேட்ட குசத்வஜராஜன், "முனிவரே! இது எனது பாக்யம். தங்களுக்குக் கைங்கர்யம் செய்ய

அடியேன் காத்துக் கொண்டிருக்கிறேன். அந்த அஸுரனை வதம் செய்து உங்களையும் இந்த க்ஷேத்திரத்தையும் காப்பாற்றுவேன் என்முன். அப்பொழுது அங்கு ஆகாசத்திலிருந்து குவலயம் என்னும் ஒரு குதிரை தோன்றியது. ஸ்ரீஹரியின் க்ருபையால் தோன்றிய அந்தக் குதிரையின் பெருமையெல்லாம் காலவர் சொல்லக் கேட்ட அரசன் அந்தக் குதிரையில் ஏறிக் கொண்டு விஷ்ணுவின் ஆவேசத்துடன் கூடியவனுய் பாதாள கேதுவை வதம் செய்யப் புறப்பட்டான்.

அப்பொழுது அந்த அஸுரன் மிகவும் கோபம் அடைந்தவனுக ஒரு பன்றி வடிவத்துடன் காலவ முனிவரைக் கொல்லுவதற்காக ஆச்ரமத்திற்கு வந்தான். அவனை அறிந்த குசத்வஜராஜன் குவலயமென்னும் குதிரையில் ஏறி அவனை வதம் செய்யத் துரத்தினுன். அந்த அஸுரனும் வெகு தூரம் ஓடினுன். அவனை விடாமல் சென்று துரத்தி அவன் மேல் கூர்மையான ஒரு பாணத்தைக் கொய்து அவனை அரசன் வதம் செய்து விட்டான். பிறகு ஆச்ரமத்திற்கு வந்து முனிவரைப் பணிந்து தேவருடைய க்ருபையினுல் லோக க்ஷேமார்த்தமாக இந்த அஸுரனைக் கொன்றேன். அடியேன் இன்னும் என்ன கைங்கர்யம் செய்ய வேண்டுமென்று பணித்தருள்க என்முன். அதற்கு காலவர் அரசே! உம் விஷயத்தில் நான் மிகவும் மனம் மகிழ்ச்சியடைந்துள்ளேன். உமக்கு என்ன வரம் வேண்டுமோ கேட்டுக் கொள்ளும் என்முர். முனிவரின் வசனத்தைக் கேட்ட அரசன் முனிவரே! தேவரீருடைய கிருபையால் எனக்கு ராஜ்யத்தில் ஏதும் குறையில்லை. எல்லாம் பூர்ணமாக இருக்கிறது. யானை குதிரை, காலாட்படை, தேர்ப் படை, செல்வம், தான்யம், அரண்மனை, ஆபரணங்கள், ஆடல், பாடல் எதுவும் குறைச்சலில்லை. ஆனுல் என் மனம் இவைகளைப் பெரிய

தாக விரும்பவில்லே. அடியேனிடம் இவைகள் யாவையும் விட பெரிய புருஷார்த்தமான மோக்ஷத்தைப் பற்றித் தெரிவிப்பீராக என்ருன். இதைக் கேட்ட காலவர் சொல்லுகிருர்: அரசே! நீ தர்மத்தைப் பரிபாலிக்க வேண்டியவன்; மோக்ஷத்தை விரும்ப வேண்டாம். உலகில் ராஜ தர்மத்தை அனுஷ்டித்துக் கொண்டிரு. உனக்கு எந்த ராஜ்யம் இப்பொழுது கைவசம் செய்யபபட வேண்டுமோ அதைக் கேட்டுக் கொள்.

குசத்வஜன்:

முனிவரே! அறியக்கூடிய எந்த ராஜபோகத்திலுைம் அடியேனுக்கு ஆக வேண்டியது ஏதுமில்லே. எனவே கருணே செய்து மோக்ஷோபாயத்தையே எனக்கு உபதேசிக்க வேண்டும்.

காலவர் :

அரசே! நீ தகுந்த அதிகாரியாக இருப்பதினுல் உபதேசிக்கிறேன். கவனமாய்க்கேள். ஸ்ரீமந்நாராயணனே ஸகல ஜீவ கோடிகளுக்கும் ஸம்ஸாரத்திலிருந்து வேறு கதி யில்லே. ப்ருமா முதலிய தேவர்கள் அவனே ஆச்ரயித்துத் தான் லோகாதிபர்களாக ஆகியிருக்கின்றனர் எனவே அந்த விஷ்ணுவையே நீ ஆச்ரயித்து முக்தி பெறுவாயாக.

குசத்வஜன் :

முனிவரே! நான் மிகவும் தன்யனுனேன். அந்த விஷ்ணுவை ஆராதிக்க என்ன வழி என்றும், எங்கு ஆராதிக்க வேண்டும் என்றும் அவர் எப்படி ஸந்தோஷிப் பார் என்றும் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

காலவர் :

அரசே! அந்த ஹரி ஸர்வாந்தர்யாமியாக இருப்பதால் ஜீவகாருண்யத்தினுல் ஸந்தோஷப்படுகிருா. இந்த

கிருஷ்ண க்ஷேத்திரத்தில் ஸந்நிஹிதனுக எழுந்தருளியிருக்கிறுர். இந்த க்ஷேத்திரத்தில் அவனுடைய திருக்கோவிலைத் திருப்பணி செய்பவர்கள் அவன் திருவடியை அடைகின்றனர். இந்த புஷ்ப கைங்கர்யம் செய்கின்றவர்களும், பூங்கா அமைப்பவர்களும், அன்னதானம் முதலியன செய்பவர்களும், ப்ரம்மோத்ஸவததை விதிப்படி நடத்துபவர்களும், அவனுக்கு மிகவும் ப்ரீதி செய்தவர்களாகின்றனர். எனவே நீயும எனது ஆச்ரமத்திலேயே தங்கியிருந்து கிருஷ்ணபத்ரா நதியில் தீர்த்தமாடித் திருவஷ்டாக்ஷரத்தை ஜபித்துக் கொண்டு பகவானை உபாஸிப்பாயாக.

சௌனகர்:

இவ்வாறு காலவரால் உபதேசிக்கப்பட்ட குசத்வஜ ராஜன் உடனே எழுந்து குருவை ஸேவித்துவிட்டு கிருஷ்ண பத்ரா நதியில் தீர்த்தமாடி மிகவும் பக்தி ச்ரத்தையுடன் கோவிலுக்குள் சென்று த்ரிவிக்ரமனை ஸேவித்துவிட்டு, 'பகவான் ப்ரத்யக்ஷமாகாதவரை எழுந்திருப்பதில்லை' என்று தீர்மானித்துக் கடுந்தவம் இயற்றலானுன். இவ்வாறு நூறு ஆண்டுகள் கடந்தன. அப்பொழுது பகவான் அவனிடம் திருவுள்ளம் உகப்படைந்து சங்க சக்ர கதாதரனுய், நீலமேக ச்யாமளனுய், பீதாம்பரதரனுய், கோடி ஸூர்ய ப்ரகாசனுய் கருடவாஹனத்தில் தரிசனந் தந்தான். பகவானை தரிசித்த குசத்வஜன் மெய்சிலிர்த்துத் தொண்டை தழுதழுத்த குரலுடன் பகவானைத் துதிக்கலானுன்.

குசத்வஜன்:

தேவ தேவ! நாராயணு! ஜகன்னுத! பரமேச்வர! உம்மை ஸேவிக்கிறேன் ஆயிரம் சூரியனுக்கு ஒப்பான காந்தியுடைய கிரீடத்தை தரிப்பவரும், பீதாம்பர தாரியு

மான உன்னை ஸேவிக்கிறேன். ப்ரம்ம ருத்ராதிகளுக்கும் மேலானவரும் பரமாத்மாவுமான உம்மை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறேன். எனக்கு அருள் செய்க.

சௌனகர் :

இவ்வாறு குசத்வஜன் துதித்துப் பணிந்து நின்ருன். அவனைக் கண்ட பகவான் பேசுகிருன்.

பகவான் :

அரசே! உமது பக்தியினுல் நான் உனக்கு வசமாயிருக்கிறேன், உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்.

குசத்வஜன் :

தேவ தேவ! உமது திருவடியைவிட்டு அடியேன் பிரியாமல் இருக்க வேண்டும். எனவே என்னைப் பரமபதத்திற்கு அழைத்துச் செல்லுவீராக. வேறு வரத்தில் எனக்கு நாட்டமில்லை.

சௌனகர் :

இவ்வாறு அரசன் சொல்லக்கேட்ட பகவான் உடனே குசத்வஜனை திவ்ய விமானத்தில் ஏற்றிக்கொண்டு தனது திரு நாட்டுக்கு எழுந்தருளினுன். அப்பொழுது தேவர்கள், முனிவர்கள், ஸித்தர்கள், கிந்நரர்கள் யாவரும் புஷ்ப வர்ஷம் செய்தனர்.

இவ்வாறு குசத்வஜராஜன் முக்தி பெற்றதைக் கேட்பவர்களுக்கும் சொல்லுபவர்களுக்கும் புனர்ஜன்மம் கிடையாது.

இவ்வாறு பாத்ம புராணம க்ஷேத்ர கண்டத்தில்
கிருஷ்ண க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில்
ஏழாவது அத்தியாயம் முற்றும்

எட்டாம் அத்தியாயம்

சௌனகர் :

கிருஷ்ண க்ஷேத்திரத்தின் மஹிமையும், அதில் மிருகண்டு, காலவர் முதலியவர்கள் தவம் செய்ததும், எழுபத்திரண்டு ப்ரம்ம தேவர்கள் அவரவர்கள் காலத்தில் பூஜை செய்ததும், குசத்வஜராஜன் ஸாரூப்யம் பெற்றதும் உமக்குச் சொன்னேன். இன்னமும் என்ன கேட்க விரும்புகிறீர்?

ருஷி :

முனிவரே! நான் மிகவும் பாக்யம் செய்தவன். எனக்கு ஒரு குறையுமில்லை. தங்கள் திருமுகத்தினுல் சிறந்த க்ஷேத்ர மான கிருஷ்ணாரண்யத்தின் பெருமை கேட்கப்பட்டது. ஸ்ரீமுஷ்ணம் என்ற க்ஷேத்திரத்தின் மஹிமையைக் கேட்க விரும்புகிறேன்.

சௌனகர் :

பாக்யவானே! இப்பொழுது சொல்லப்பட்ட க்ருஷ்ணாரண்ய க்ஷேத்திரத்தின் தென்கிழக்கில் ஐந்து யோஜனை தூரம் தாண்டிய பிறகு ஸ்ரீமுஷ்ணம் என்னும் மஹா க்ஷேத்திரமுள்ளது. விஷ்ணுவின் ஸ்வயம் வ்யக்த க்ஷேத்திரங்களுள் அது சிறந்ததாக இருக்கிறது. பகவான் அங்கு ஸ்வயம்பு மூர்த்தியாக (சிற்பியால் செதுக்கப்படாது தானே தாங்கிய வடிவமுடையவனுக) வராஹரூபனுய் ஒரு அரச மரத்தடியில் காக்ஷி தருகிறுன். ஸகல ஸுரர்களுக்கும் தெய்வமான ஸ்ரீமந் நாராயணன் திருப்பாற்கடலில் சயனித்திருக்கும்போது தனது பரம பக்தனுன நாரதரைப் பார்த்துச் சொன்னதைச் சொல்லுகிறேன், கேட்பீர்.

ஒரு ஸமயம் த்ரிலோக ஸஞ்சாரியான நாரதர் ஹரி பஜனே செய்து கொண்டே எங்கும் விஷ்ணு பக்தியை ப்ரசாரம் செய்து கொண்டு திருப்பாற் கடலுக்கு வந்தார். அங்கு சேஷ சயனத்தில் படுத்திருப்பவரும், நீருண்ட மேகம் போன்ற திருமேனி உடையவரும், சதுர்ப்புஜங்களிலும் சங்கு சக்ரம் கதை பத்மம் இவை களைத் தாங்குபவரும், ஸ்ரீதேவி பூதேவி நீலாதேவி இவர் களால் வருடப்பட்ட திருவடியுடையவருமான பகவானே தரிசித்து துதித்தார். அப்பொழுது நாரதரின் வருகையைக் கண்ட எம்பெருமான் உடனே எழுந்திருந்து, ''நாரதரே! ஸௌக்யமா?'' என்று கேட்டான். அதற்கு நாரதர், ''தேவரீர் திருவருளால் எனக்கு ஒரு குறையுமில்லை. உமது புகழை இந்த வீணையின் துணை கொண்டு பாடித் திரிகிறேன். உலகில் நீர் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரங் களுள் எது ஸேவிக்கத் தக்கது என்று அருள் செய்ய வேண்டும்'' என்றார். அப்பொழுது அங்குள்ள விஷ்ணு தூதர்கள் யாவரும், ''ஸர்வேச்வர! பூலோகத்திலுள்ள க்ஷேத்திரங்களுள் தேவரீருக்கு மிகவும் உகந்த க்ஷேத்திரம் எது என்று தெரிந்து கொள்ள நாரதரைப் போலவே நாங்களும் ஆசைப்படுகிறோம்'' என்றனர் அப்பொழுது பகவான், ''நாரதரே! ஸ்ரீமுஷ்ணம், கிருஷ்ணாரண்யம் என்னும் இரண்டு க்ஷேத்திரமும் எனக்கு உகந்தது, தேவர் களுக்கும், முனிவர்களுக்கும், கின்னரர்களுக்கும், யோகி களுக்கும் கூடக் காணக் கிடைக்காத நான் ஸ்ரீமுஷ்ணத்தில் ஸுலபமாய் யாவருக்கும் வராஹ ரூபனுய் தரிசனந் தருகிறேன்: ஸகல தர்மங்களும் கலியில் நஷ்டமாகி விட்ட படியால் பக்தர்களே ரக்ஷிப்பதற்காக வேண்டி நான் கிருஷ்ணாரண்யத்திலும், ஸ்ரீமுஷ்ணத்திலும் பக்தர்களுடன் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிறேன். எனவே, கலியுகத்தில் இந்த இரண்டு க்ஷேத்திரங்களுக்கும் ப்ராதான்யம் அதிக மாகும். எனவே என்னே அந்த க்ஷேத்திரத்தில் சென்று

தர்சனம் செய்து ஆராதிப்பீராக'' என்றான். உடனே நாராதர் விஷ்ணு கிங்கரர்களுடன் எம்பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு கிருஷ்ணபுரம் வந்து ஸ்ரீகர விமானத்தில் இருக்கும் கிருஷ்ணனைப் பூஜித்தனர். பிறகு ஸ்ரீமுஷ்ணத்தில் அச்வத்த விருக்ஷத்தின் அடியில் இருக்கும் வராஹனையும் பூஜித்தனர். இந்த இரண்டு க்ஷேத்திரங்களிலும் தங்கி தான தர்மங்களைச் செய்பவர்கள் விரும்பிய பலனை அடைகின்றனர். யார் இந்த கிருஷ்ணக்ஷேத்திர மஹிமையையும், அவ்வாறே ஸ்ரீமுஷ்ண மஹிமையையும் படிக்கக் கேட்பார்களோ அவர்கள் விரும்பிய பலனை அடைவார்கள்.

இவ்வாறு பாத்மபுராணம் க்ஷேத்திர கண்டத்தில்
கிருஷ்ண க்ஷேத்ர மஹாத்ம்யத்தில்
எட்டாவது அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ ஹரி :

மற்ற வரலாறுகள்

ஶ்ரிய : பதியான ஸர்வேஸ்வரன் அர்ச்சாரூபியாய் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசங்களில் திருக்கோவலூர் ஒன்று, தற்போது வழங்கும் திருக்கோவலூர் மிகப் பிராசீனமானதும் மிகப் பிரஸித்தி பெற்றதுமான வைணவ க்ஷேத்திரம். இந்த திருக்கோவலூர் தென்னாற்காடு மாவட்டத்தில் கோட்டாட்சித் தலைமை ஸ்தானம். இந்த ஊர் விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலை செல்லும் தென்னிந்திய இருப்புப் பாதையில் விழுப்புரத்திலிருந்து 5-வது ஸ்டேஷனாக உள்ளது. ஊர், ஸ்டேஷனிலிருந்து 2மைலில் உள்ளது. வெண்ணெய் உருகு முன்னே பெண்ணை பெருகும் என்று பழமொழி. தற்போது மேல்

பாலம் கட்டப்பட்டு போக்கு வரத்திற்கு சௌகரியமாக இருக்கிறது. வெள்ளத்தினுல் பயமில்லே. இந்த க்ஷேத்திரம் நடு நாடு என்று பெயர் பெற்று பல அரசர்களால் ஆளப் பட்டு வந்திருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே பல்லவ அரசர்களால் இவ்வூர் கோயில்களும், கோபுரங்களும் கட்டப்பட்டிருக்கிறது என்று கோயில் கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. இந்த க்ஷேத்திரம் புராண காலத்தில் "பஞ்சகிருஷ்ணுரண்ய க்ஷேத்திரம்" என்று வழங்கும் ஐந்து க்ஷேத்திரங்களில் ஒன்று.

ஐந்து க்ஷேத்திரங்களாவன :—

1 திருக்கோவலூர், **2 திருக்கண்ணபுரம்,**
3 திருக்கண்ணங்குடி, **4 திருக்கண்ணமங்கை,**
5 திருக்கண்ணன் கவித்தலம்.

இந்த க்ஷேத்ர வைபவத்தை பிரம்ம புராணம் விரிவாகப் பேசுகிறது. புராண காலத்தில் கிருஷ்ண க்ஷேத்திரம் என்றும் ஆழ்வார்களால் திருக்கோவலூர் என்றும் மங்களாசாஸனம் செய்யப் பட்டுள்ளது. தற்போது மக்கள் திருக்கோயிலூர் என்று வழங்கி வருகிருர்கள்.

இந்த க்ஷேத்திரத்தின் நடுவில் மூன்று பெரிய கோபுரங் அழகாக நிமிர்ந்து நிற்கின்றன. கோயிலில் பல பெரிய மண்டபங்களும் சந்நிதிகளும் உள்ளன. பல்லவ அரசர் களும் விஜய நகர அரசர்களும் இக்கோயிலேக் கட்டி ஆதரித்து வந்ததாகவும் கோயில் கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. தற்போது இக்கோயில் நிர்வாகம் திருக்கோவலூர் ஸ்ரீ எம்பெருமானுர் ஜீயர் சுவாமிகளின் பரம்பரையில் 500 வருஷங்களாக இருந்து வருகிறது.

இந்த எம்பெருமானே முதல் முதலில் தமிழ் பாசுரங்களினுல் பாடியவர்கள் முதலாழ்வார்கள் எனப்படுவர். ஆழ்வார்கள், பன்னிருவர் அவர்களில் முன்னே அவதரித்த முதலாழ்வார்கள் மூவர். பொய்கையார், பூதத்தார், பேயார் எனப்படுவர்.

பகவான் தான் ராம கிருஷ்ணுதி அவதாரங்களினுல் அடைய முடியாததை ஆழ்வார்களைக் கொண்டு அடைய விருப்பங்கொண்டு தன் பரிவாரங்களான அனந்த, கருட, விஷ்வக் ஸேனுதிகளை இந்த லீலா விபூதியில் அவதரிப்பித் தான். அவர்களே ஆழ்வார்கள் எனப்படுவர்.

இந்த முதலாழ்வார்கள் மூவரும், காஞ்சியிலும் கடல் மல்லையிலும், மயிலையிலும் முறையே பொய்கையிலும் புஷ்பங்களிலும் அயோனிஜர்களாய் அவதரித்தார்கள் ஐப்பசியில் திருவோணம், அவிட்டம் சதயம் இவர்கள் அவதரித்த திரு நக்ஷத்திரங்கள். (''ஐப்பசியிலோணம், அவிட்டம் சதயமிவை'') என்று ஸ்ரீ மணவாள மாமுனி கள் தம்முடைய உபதேச ரத்தின மாலையில் அருளிச் செய் துள்ளார்.

இம் மூவரும் தனித் தனியே ஒருவரை ஒருவர் பார்க் காமலும் பல திவ்ய தேசங்களைக் கடந்து ஒரு நாள் இரவு இந்த திருக்கோவலூரையடைந்தனர். எம்பெருமான் இவர்களை ஒன்று சேர்க்க எண்ணிப் பெரு மழையை அன்று இரவு வர்ஷிக்கச் செய்தார். முதலில் வந்த பொய்கை யாழ்வார் மிருகண்டு முனிவரின் ஆசிரமத்தை அடைந்து முனிவரை 'இரவு தங்குவதற்கு இடமுண்டோ' என்று வினவ, முனிவரும் ஓர் இடத்தை இடை கழியைக் காட்டி ஒருவர் படுக்கலாம் என்று சொல்லிச் சென்றுர். பின்னர் பூதத்தாரும் அங்கு வந்து இடம் கேட்க முன்னவர், இருவர் இருக்கலாம் என்று தெரிவித்து உள்ளே அழைத்துக் கொண்டார் சிறிது நேரத்தில் பேயாரும் வந்து இடம் வினவ, மூவர் நிற்கலாம் என்று முனிவர் காட்டிய சிறிது இடத்தில் மூவரும் நின்றுகொண்டு (போதயந்த பரஸ் பரம்) என்று பகவானுடைய குணங்களை அனுபவிக்க லாயினர் அந்த இருட்டில நான்காவது நபராக பகவா னும் இம்மூவர் நடுவில் புகுந்து நெருக்கவும் முதலாழ்வார்

களும நாலாவது பேர் யாராவது வந்ததுண்டோ என்று பார்த்துத் திகைக்கவும் பகவானும தன் பேரொளியினல் தன் திருமேனியை இவர்களுக்கு காட்டியருள ஆழ்வார் களும் ஞானக் கண்ணுல் கண்டு களித்து "வையந் தகளியா" என்று பொய்கையாரும், (100) "அன்பே தகளியா" என்று பூதத்தாரும், (100) திருக்கண்டேன் என்று பேயாரும் (100) நூறு நூறு பாசுரங்களினல் துதித்து பாடி மகிழ்ந்தார்கள்.

முதன் முதல் இந்த க்ஷேத்திரத்தில் தான் ஆழ்வார் களும் தமிழ் பாசுரங்களினுல் பகவானே மங்களாசாஸனம் செய்தருளினுர்கள் என்பது இந்த க்ஷேத்திரத்திற்கே மிகப் பெருமை தருவதாகும். பின்பு திருமங்கையாழ்வாரும் இந்த க்ஷேத்திரத்தையடைந்து தம் பாசுரங்களினுல் மங்களா சாஸனம் செய்தருளினுர். அனேக பூர்வாசார்யர் களும் இந்த எம்பெருமான் விஷயமாக ஸ்தோத்திரங்கள் செய்தருளியிருக்கிறுர்கள். இந்த க்ஷேத்திராபதி கண்ண னுடைய வைபவத்தை அறிந்து ஸ்ரீ துர்க்கை விந்தியமலே யிலிருந்து வந்து இந்த எம்பெருமானுக்கு ரக்ஷகியாக எப்போதும் இருந்து வருகிறுள். இங்குள்ள ஸ்ரீ துர்க்கை மிக வரப்ரஸாதி. பக்தர்களின் மனேபீஷ்டத்தைப் பூர்த்தி செய்து வருகின்றுள்.

திருமங்கையாழ்வாரும் தம்முடைய பாசுரத்தில் துர்க் கையை "கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட," என்று இந்த திவ்ய தேசத்தைப் பாடுகிறுர்.

பகவானுக்கும் தாயாருக்கும் ஆராதனம், நிவேதனம் ஆன பிறகு துர்க்கைக்கு ஆகும் வழக்கம் இச்சந்நிதியில் இருந்து வருகிறது. பிரதி வெள்ளிக் கிழமையும் அனேக அர்ச்சனேகள் துர்க்கைக்கும் நடந்து வருகிறது இந்தக் கோயிலில் பெருமாள் சந்நிதியில் அநேக சந்நிதிகள் இருக் கிறது. இவை எல்லோரும் அவசியம் பார்க்கத் தக்கவை.

மிகப் பெரிய மண்டபம் முதலில் இருக்கின்றது. இதில் பிரதி வெள்ளிக் கிழமையிலும் பெருமாளுக்கும், தாயாருக்கும் இந்த மண்டபத்தில் உற்சவம் நடை பெறுகிறது. பலி பீடத்தின் வடக்கில் க்ஷேத்திராதிபதி கண்ணன் ஸந்நிதி இருசகிறது.

இந்தக் கோயிலைப் பல அரசர்கள், பல காலங்களில் கட்டியிருக்கிறார்கள் என்பது கோயில் கல்வெட்டினுல் தெரிய வருகிறது. பஞ்சபர்வ, மாஸோத்ஸவ பிரம்மோத்ஸவங்கள் நடந்து வருகின்றன. கிலமாயுள்ள மண்டபங்களையும், விமானங்களையும் திருப்பணிக் கமிட்டியார் புதுப்பித்து மஹா ஸம்ப்ரோக்ஷணம் விமரிசையாக நடத்தி வைத்தார்கள். மேலும் பல திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டியிருப்பதால் ஆஸ்திகர்களும், பக்தர்களும் இந்த அறிய கைங்கர்யத்திற்கு பொருள் உதவி செய்து ஸ்ரீ திருவிக்ரமனுடைய கடாக்ஷத்தைப் பெற வேணுமாய்க் கோரப்படுகிறது.

ஸ்ரீ ஹரி:

ஆழ்வார்களின் அருளிச் செயல்கள்

திருமங்கையாழ்வார்

மஞ்சாடு வரையேழும் கடல்களேழும்
வானகமும் மண்ணகமும் மற்றுமெல்லாம்
எஞ்சாமல் வயிற்றடக்கி யாலின் மேலோர்
இளந்தளிரில் கண்வளர்ந்த ஈசன் றன்னை,
துஞ்சா நீர் வளஞ் சுரக்கும் பெண்ணைத் தென்பால்
தூயநான் மறையாளர் சோமுச் செய்ய
செஞ்சாலி விளை வயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக் கோவலூரதனுள் கண்டேன் நானே (1)

கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம்
    தீபங்கொண்டமரர்தொழப் பணங்கொள் பாம்பில்
சந்தணிமென் முலைமலராள் தரணிமங்கை
    தாமிருவ ரடிவருடும் தன்மை யானை,
வந்தனை செய்து இசை யேழா றங்கம் ஐந்து
    வளர் வேள்வி நான் மறைகள் மூன்று தீயும்
சிந்தனை செய்து திருபொழுது மொன்றும் செல்வத்
    திருக் கோவலூரதனுள் கண்டேன் நானே. (2)

கொழுந்தலரு மலர்ச் சோலைக் குழாங்கள் பொய்கைக்
    கோள் முதலை வாளெயிற்றுக் கொண்டற் கொள்கி
அழுந்திய மா களிற்றினுக் கன்றுழி யேந்தி
    அந்தரமே வரத்தோன்றி யருள் செய்தானை,
எழுந்த மலர்க் கரு நீல மிருந்தில் காட்ட
    இரும் புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட
செழுந்தட நீர்க் கமலம் தீ விகைபோல் காட்டும்
    திருக் கோவலூரதனுள் கண்டேன் நானே (3)

தாங்கரும் போர் மாலிபடப் பறவை யூர்ந்து
    தரா தலத்தோர் குறை முடித்த தன்மை யானை,
ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந் தன்பு கூரும்
    அடியவர்கட் காரமுத மானான் றன்னை,
கோங் கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக்
    குழாவரிவண் டிசை பாடும் பாடல் கேட்டு
தீங் கரும்பு கண் வளரும் கழனி சூழ்ந்த
    திருக் கோவலூரதனுள் கண்டேன் நானே (4)

கறைவளர்வேல் கரன்முதலாக் கவந்தன் வாலி
கணையொன்றி னால்மடிய இலங்கை தன்னுள்
பிறையெயிற்று வாளரக்கர் சேனையெல்லாம்
பெருந்தகையோடுடன்துணித்த பெம்மான்றன்னை,
மறை வளரப் புகழ்வளர மாடந் தோறும்
மண்டப மொண் தொளியனைத்தும் வாரமோத
சிறை யணைந்த பொழிலணைந்த தென்றல் வீசும்
திருக் கோவலூரதனுள் கண்டேன் நானே (5)

உறியார்ந்த நறுவெண்ணெ யொளியால் சென்றங்
குண்டானைக் கண்டாய்ச்சி யுரலோ டார்க்க
தறியார்ந்த கருங்களிறே போல நின்று
தடங்கண்கள் பனிமல்கும் தன்மை யானை
வெறியார்ந்த மலர் மகள் நாமங்கை யோடு,
வியன் கலையெண் தோளினள் விளங்கு செல்வச்
செறியார்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும்
திருக் கோவலூரதனுள் கண்டேன் நானே. (6)

இருங்கை மா கரி முனிந்து பரியைக் கீறி
இன விடைகளே ழடர்த்து மருதம் காய்த்து,
வரும் சகட மிறவுதைத்து மல்லை யட்டு
வஞ்சஞ் செய் கஞ்சனுக்கு நஞ்சா னானை,
கருங் கமுகு பசும் பாளை வெண்முத் தீன்று
காயெல்லாம் மரகதமாய்ப் பவளங் காட்ட,
செருந்தி மிக மொட்டலர்த்தும் தேன் கொள்சோலைத்
திருக் கோவலூரதனுள் கண்டேன் நானே (7)

பாரேறு பெரும் பாரந் தீரப் பண்டு
    பாரதத்துத் தூதியங்கி பார்த்தன் செல்வத்
தேரேறு சாரதியா யெதிர்ந்தார் சேனே
    செருக்களத்துத் திறலழியச் சென்ருன் றன்னே
போரேருென் னுடையானு மளகைக் கோனும்
    புரந்தரனும் நான்முகனும் பொருந்து மூர் போல்
சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத்
    திருக் கோவலூரதனுள் கண்டேன் நானே (8)


தூவடிவின் பார்மகள் பூ மங்கை யோடு
    சுடராழி சங்கிருபால் பொலிந்து தோன்ற,
காவடிவில் கற்பகமே போல நின்று
    கலந்தவர்க்கட்ருள் புரியுங் கருத்தினனே
சேவடிகை திருவாய் கண் சிவந்த வாடை
    செம்பொன் செய் திருவுருவ மானுன் றன்னே,
தீவடிவின் சிவனயனே போல்வார் மன்னு
    திருக் கோவலூரதனுள் கண்டேன் நானே (9)

வாரணங் கொளிடர் கடிந்த மாலே நீல
    மரகதத்தை மழைமுகிலே போல்வான் றன்னே,
சீரணங்கு மறையாளர் நிறைந்த செல்வத்
    திருக் கோவலூரதனுள் கண்டேன்; என்று
வாரணங்கு முலே மடவார் மங்கை வேந்தன்
    வாட்கலிய னெலியைந்து மைந்தும் வல்லார்
காரணங் களாலுலகங் கலந்தங் கேத்தக்
    கரந்தெங்கும் பரந்தானேக் காண்பர் தாமே (10)
        —பெரிய திருமொழி 2-10

அன்ருயர் குலக்கொடி யோடணிமா
மலர் மங்கை யொடன் பளவி, அவுணர்க்
கென்ருனு மிரக்க மிலாத வனுக்
குறையுமிடமாவது இரும்பொழில் சூழ்
நன்ருய புனல் நறையூர் திரு வாலி
குடந்தை தடந்திகழ் கோவல் நகர்
நின்ருனிருந்தான் கிடந்தான் நடந்தாற்
கிடம் மாமலை யாவது நீர் மலையே. 2-4-1

தாய் நினைந்த கன்றே யொக்க வென்னையும்
தன்னையே நினைக்கச் செய்து தானெனக்
காய் நினைந்தருள் செய்யு மப்பனை
அன்றிவ் வையக முண்டுமிழ்ந்திட்ட
வாயனை மகரக்குழைக் காதனை
மைந்தனை மதிள் கோவ லிடைகழி
ஆயனை, அமரர்க்கரி யேற்றை யென்
அன்பனை யன்றி யாதரி யேனே. 7-3-2

பேய் முலைத்தலை நஞ்சுண்ட பிள்ளையைத்
தெள்ளி யார் வணங்கப் படுந்தேவனை,
மாயனை மதிள் கோவ லிடைகழி
மைந்தனை யன்றி யந்தணர் சிந்தையுள்
ஈசனை, இலங்கும் சுடர்ச் சோதியை
எந்தையை யெனக் கெய்ப்பினில் வைப்பினை
காசினை மணியைச் சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டு,கொண்டேனே. 7-10-4



பொய்கையார் பூதத்தார் பேயார்

(முதலாழ்வார்கள்)

அலம் புரிந்த நெடுந் தடக்கை அமரர் வேந்தன்
அஞ்சிறைப்புள் தனிப் பாகன் அவுணர்க் கென்றும்
சலம் புரிந்தங் கருளில்லாத் தன்மை யாளன்
தானுகந்த வூரெல்லாம் தன் தாள் பாடி
நிலம் பரந்து வரும் கலுழிப் பெண்ணை யீர்த்த
நெடு வேய்கள் படுமுத்த முந்த வுந்தி
புலம் பரந்து பொன்விளைக்கும் பொய்கை வேலிப்
பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே 6

வற்புடைய வரைநெடுந்தோள் மன்னர் மாள
வடிவாய மழுவேந்தி யுலக மாண்டு,
வெற்புடைய நெடுங் கடலுள் தனிவேலுய்த்த
வேள்முதலா வென்றூர் விந்தை மேய,
கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட
கடிபொழில் சூழ் நெடுமறுகில் கமல வேலி
பொற்புடைய மலையரையன் பணிய நின்ற
பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே. 7

பொங்கார் மெல்லிளங் கொங்கை பொன்னேபூப்பப்
பொரு கயல்கண் ணீரரும்பப் போந்து நின்று
செங்கால மடப்புறவம் பெடைக்கும் பேசும்
சிறுகுரலுக் குடலுருகிச் சிந்தித்து, ஆங்கே
தண்காலும் தண்குடந்தை நகரும் பாடித்
தண் கோவலூர் பாடி யாடக் கேட்டு,
நங்காய்! நங் குடிக்கிதுவோ நன்மை! என்ன
நறையூரும் பாடுவாள் நவில் கின்றளே

— திருநெடுந் தாண்டகம்

ஆரானும் கற்பிப்பார் நாயகரே? நானவனைக்
காரார் திருமேனி காணும் அளவும் போய்
சீரார் திருவேங்கடமே திருக்கோவ
லூரே, மதிள் கச்சி ஊரகமே பேரகமே,

—சிறிய திருமடல்

சென்னி மணிச் சுடரைத் தண்கால் திறல் வலியை
தன்னைப் பிறரறியாத் தத்துவத்தை முத்தினை,
அன்னத்தை மீனை அரியை அருமறையை,
முன்னிவ் வுலகுண்ட மூர்த்தியை கோவலூர்
மன்னும் இடைகழி யெம் மாயவனை:

—பெரிய திருமடல்

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கில் நீள் கோவல் பொன்னகரும்
நான் கிடத்தும்
நின்ரு னிருந்தான் கிடந்தான் நடந்தானே,
என்ருல் கெடுமாம் இடர்.

நீயும் திருமகளும் நின்ருயால், குன்றெடுத்துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா, — வாயில்
கடை கழியா வுன்புகா காமர் பூங்கோவல்
இடை கழியே பற்றி யினி.

—பொய்கையாழ்வார்

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்,
தமருள்ளம் தண்பொருப்பு வேலை, தமருள்ளம்
மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே,
ஏவல்ல எந்தைக் கிடம்.

—பூதத்தாழ்வார்

ஸ்ரீ :

ஸ்ரீ புஷ்பவல்லி ஸமேத ஸ்ரீ தேஹளீச
பரப்ரம்மணே நம :

தியான ஸ்லோகம்

ப்ரஹ்லாத தார்க்ஷ்ய பலி சுக்ர நமுச்யனந்த
லக்ஷ்மீ மிருகண்டு முனி வாஸுகி ஸேவ்யமானம்
காஸார பூத மஹதாஹ்வய திவ்ய ஸூரி
ஸம்மர்த்தனேத் ஸுக மஹம் சரணம் ப்ரபத்யே 1

ஸ்ரீ பீடம் பாஷ்யகாரம் பரிகர நிகரை:
ஸேவிதம் பாகசாஸான்
ஸேனேசம் ஸங்கு காலம் சடரிபுமனிசம்
ஸ்ரீ ஸஹாயம் ச்ரியம்ச
நத்வாஹம் வாமனுக்யம் ஸகல ஸுரஸரோ
பூதராஜம் ககேசம்
ஸ்ரீமத் பக்தாங்க்ரிரேணும் பரம்பிசததோ
ஸ்ரீ தேஹளீசம் ப்ரபத்யே. 2

முதலாழ்வார்கள் மூவர் அருளிய

திரு அந்தாதி முதல் பாசுரங்கள்

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று 1

—பொய்கையாழ்வார்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா-நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்.

— பூதத்தாழ்வார்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன், திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

—பேயாழ்வார்.

ஸ்ரீ :

ஸ்ரீ திரிவிக்ரம ஸ்வாமி ஸந்நிதியில் நடைபெறும் உத்ஸவாதிகள் விபரம்

சித்திரை	ஸ்ரீராம நவமி உத்ஸவம் ஸ்ரீராமானுஜர் ஜயந்தி உத்ஸவம்
வைகாசி	விசாக கருட சேவை நம்மாழ்வார் சாற்றுமறை
ஆனி	பெரியாழ்வார் சாற்றுமறை
ஆடி	திருவாடிப்பூரம், ஸ்ரீ ஆண்டாள் உத்ஸவம்
ஆவணி	ஸ்ரீ ஜயந்தி, உறியடி உத்ஸவம்
புரட்டாசி	நவராத்திரி உத்ஸவம் திருப்பவித்ரோத்ஸவம்
ஐப்பசி	முதலாழ்வார் சாற்றுமறை ஸ்ரீ மணவாள மாமுனிகள் 10 நாட்கள் உத்ஸவம்
கார்த்திகை	கைசிக ஏகாதசி உத்ஸவம் திருக் கார்த்திகை தீப உத்ஸவம் திருமங்கை ஆழ்வார் சாற்றுமறை
மார்கழி	பகல் பத்து, இராப்பத்து (வைகுண்ட ஏகாதசி) ஸ்ரீ புஷ்பவல்லித் தாயார் அத்யயன உத்ஸவம் சிறப்பாக நடைபெறுகிறது.
தை	ஸ்ரீ எம்பெருமானுர் ஜீயர் வருஷ சாற்றுமுறை உத்ஸவம்
மாசி	மாசி மக உத்ஸவம்
பங்குனி	பிரம்மோத்ஸவம் 10 நாட்கள் சிறப்புடன் நடைபெறுகிறது.

மற்றும் பஞ்சபர்வ உத்ஸவமும், ஸ்ரீ புஷ்டவல்லித் தாயார் வெள்ளிக்கிழமை ஊஞ்சல் உத்ஸவமும் நடைபெறுகிறது.

கிடைக்குமிடம் :

ஸ்ரீநிவாஸ ராமாநுஜாசாரியார்

ஸ்ரீ திருவிக்ரம ஸ்வாமி ஸன்னிதி ஆதீன தர்மகர்த்தா

ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி

திருக்கோவலூர்-605767.

(தென்னாற்காடு மாவட்டம்)

குரு அச்சகம். திருவல்லிக்கேணி, சென்னை-5 போன் : 844371